Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror


www.tamilmirror.lk

MONDAY, JULY 8, 2024

திங்கட்கிழமை ஜூலை 08, 2024 | ஒளி: 10 கதிர்: 289 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## ஜனாதிபதியின் பதவிக்காலத்தை உயர்நீதிமன்றம்

# இன்று ஆராய்கிறது



தற்போதைய ஜனாதிபதியின் பதவி காலம் தொடர்பில் தெளிவூட்டுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை திங்கட்கிழமை (08) ஆராய்வதற்கு உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை (04) தீர்மானித்தது.

இந்த மனுவை ஆராய்வதற்கு ஐந்து நீதியரசர்கள் அடங்கிய குழாமை, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய நியமித்துள்ளார். தனது தலைமையில் உயர் நீதிமன்ற நீதியரசர்களான விஜித் மலல்கொட, முர்து பெர்ணாண்டோ, பிரித்தீ பத்ம சூரசேன, எஸ்.துரைராஜா ஆகியோரே இந்த மனுவை ஆராயவுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பதவி காலம் தொடர்பில் தெளிவூட்ட வேண்டுமெனக் கோரி உயர்நீதிமன்றத்தில் புதன்கிழமை (03) மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி புலமைப்பரிசில் குறித்து விசேட அறிவிப்பு

க.பொ.த. (உ/த) மற்றும் முதலாம் தரம் முதல் 11ஆம் தரம் வரை கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் உதவித்தொகையை ஜூலை 12 முதல் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, இந்த புலமைப்பரிசில் தொடர்பான புதிய தகவல்களைப் பெற ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தை Follow/ Like செய்யுமாறு ஜனாதிபதியின் நிதியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.-

## கனடா பறக்க முயன்ற யாழ். இளைஞன் கைது

போலியான இலங்கை கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கனடாவுக்குத் தப்பிச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த இலங்கை இளைஞர் ஒருவர் குடிவரவுத் திணைக்களத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர்.

சவூதி அரேபியாவின் தம்மாம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

விமானமான UL-263 இல் ஏறுவதற்காக அவர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளார். அங்கிருந்து வேறு விமானம் மூலம் கனடா செல்ல திட்டமிட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

## கதிர்காமத்தில் முதலை அச்சம்

கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீராடிக்கொண்டிருந்த நபர், முதலையால் இழுத்துச் செல்லப்பட்டுக் கடித்ததில் உயிரிழந்தார். இவர்,மாணிக்க கங்கையில் சனிக்கிழமை (06) காலை நீராடியபோதே முதலையால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பொலிஸ் உயிர் காக்கும் படையினர் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர், மட்டக்களப்பைச்சேர்ந்த நடுத்தர வயதுடையவர் ஆவார். அவரது சடலத்தை அவரது மனைவி உறவினர்கள் அடையாளம் காண்பித்தனர்.

## 78 வயதான பெண் படுகொலை: பாடசாலை மாணவன் கைது



மஹிந்த குமார்

பலாங்கொடையில் 78 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், 17 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் எதிர்வரும் 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2





## ஐயாவின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் பூதவுடல், அக்கினியுடன், ஞாயிற்றுக்கிழமை (08) மாலை சங்கமமானது.

(படம்: எஸ்.கீதபொன்கலன்)

தொடர்ச்சி P2



## கதிர்காமத்தில் யானை குழம்பியதில் பலர் காயம்

கதிர்காமம் எசல பெரஹெர உற்சவத்தின் முதல் நாள் உற்சவம் சனிக்கிழமை (06) நடைபெற்றது. இதில் பெரஹெர ஊர்வலத்தில் பங்குபற்றிய யானை ஒன்று குழம்பியுள்ளது.

இதையடுத்து, பெரஹெர உற்சவத்தில் ஏற்பட்ட பதற்றத்தில் 13 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.காயமடைந்தவர்கள் கதிர்காமம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்குப் பாரதூரமான பாதிப்புக்கள் இல்லை என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## “தேர்தலை பிற்போட ஜனாதிபதி முயற்சி”



தேர்தலை எவ்வாறேனும் பிற்போடவே தற்போதைய ஜனாதிபதி முயற்சிக்கிறார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார். கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (7) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## மனோவுக்கு எதிராக மலையகத்தில் ஆர்ப்பாட்டம்

ஆ.ரமேஸ், மஹிந்த குமார்

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மலையகத்தில் பல இடங்களில் ஞாயிற்றுக்கிழமை (08) போராட்டங்கள் நடத்தப்பட்டன.

தொடர்ச்சி P2



## “இந்தி படமொன்றை பார்த்ததை போன்று கோரக்காட்சிகள் இருந்தன”





பதுளை-தன்னபங்குவ வீதியில் வெலிஹிந்த பிரதேசத்தில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற லொறி விபத்தில் நால்வர் உயிரிழந்து மூவரை வைத்தியசாலைக்கு அனுப்பிய கோரமான காட்சியை நேரில் பார்த்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து சாரதி கே.டி.நாலக சுரவீர ஒரு இந்தி படத்தைப் பார்த்ததைப் போல இருந்தது என விபரித்துள்ளார்.

எனினும், கடும் வேகத்தில் முன்னால் சென்றதாகக் கூறப்படும் லொறியில் மோதாமல் பேருந்தில் பயணித்த சுமார் ஐம்பது பயணிகளையும் காப்பாற்றியதாகக் கூறினார்.

தொடர்ச்சி P2

## ஜூலை 17க்கு பின் தேர்தல் திகதி

2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலைச் சான்றளிக்கும் பணி இன்னும் சில நாட்களில் நிறைவடையும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி எதிர்வரும் ஜூலை 17ஆம் திகதிக்குப் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டை பாதுகாக்கும் வரை ரணிவுக்கு ஆதரவு

### பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு



நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் வரை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதிக்கு பலத்தையும் ஆதரவையும் வழங்கும் என பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் எம்மை விட்டுப் பிரிந்த போதும் ரணிலால் நாட்டை காப்பாற்ற முடியும் என தீர்மானித்ததாகவும், அதற்கு இன்று வரை ஆதரவு வழங்குவதாகவும் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். நாட்டின் நலனுக்காகவே செய்கிறேன் என்றும் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அழைப்பாளரும், பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்டத் தலைவருமான ரோஹித அபேகுணவர்தனவின் அரசியல் வாழ்க்கையின் 27 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு, களுத்துறை புகையிரத நிலைய மைதானத்தில் சனிக்கிழமை (07) நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பசில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். இதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா மற்றும் பொதுஜன பெரமுனவின் பெருந்திரளான உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஜனாதிபதியின் பதவிக்காலத்தை உயர்நீதிமன்றம் இன்று ஆராய்கிறது

அரசியலமைப்புக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பதவிக்காலத்தை தெளிவூட்டவேண்டுமென உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவின் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த மனு, வர்த்தகரான சீ.டிலெவனவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் பிரகாரம் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் தெளிவூட்டும் வரை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு மனுதாரர், தனது மனுவின் ஊடாக கோரியிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடம் கட்டாயமாக நடத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஶ்ரீ ரத்நாயக்க தெரிவித்திருந்தார்.

இந்த வருடம் செப்டம்பர் 16 ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 16 ஆம் திகதிக்கும் இடையே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான சட்ட அதிகாரம் ஆணைக்குழுவிற்குக் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே இந்த மனு, திங்கட்கிழமை (08) ஆராயப்படவுள்ளது. இதேவேளை, இந்த மனு ஆராயப்படும்போது, இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் உயர்நீதிமன்றத்தில் ஆஜராகுமெனச் சங்கத்தின் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்யா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கனடா பறக்க முயன்ற யாழ். இளைஞன் கைது

ஆரம்ப பணியை முடித்துவிட்டுக் குடியேற்றப் பணிக்காக வந்தபோது, குடிவரவுத் துறையின் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் அவரைத் தடுத்து நிறுத்தி கடவுச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்களைச் சரிபார்த்தனர்.

குறித்த கடவுச்சீட்டு கனடாவில் விசா பெற்றுள்ள மற்றுமோர் இலங்கையருக்குச் சொந்தமானது என தெரியவந்துள்ளது.

18 இலட்சம் ரூபாவை தரகர் ஒருவரிடம் கொடுத்து தனது புகைப்படம் மற்றும் ஏனைய அடிப்படைத் தகவல்களைக் கடவுச்சீட்டில் இணைத்து இந்த கடவுச்சீட்டைப் போலியாகத் தயாரித்துள்ளதாக குடிவரவு-குடியகல்வு திணைக்கள எல்லை ஆய்வு பிரிவு அதிகாரிகள் முன்னிலையில் தெரிவித்துள்ளார். அதனையடுத்தே அவரை கைது செய்துள்ள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மனோவுக்கு எதிராக மலையகத்தில்...



தோட்டத் தொழிலாளர்களுக்கான 1,700 ரூபாய் சம்பள உயர்வு தொடர்பில் அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானிக்கு இடைக்காலத் தடை விதிக்க கோரி பெருந்தோட்ட கம்பனிகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தன.

இதற்கமைய மனுவைப் பரிசீலித்த உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை, வியாழக்கிழமை (04) பிறப்பித்தது. இது குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், உயர்நீதிமன்ற வளாகத்தில் கடந்த (04) ஆம் திகதி ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்திருந்தார்.

அவர் வழங்கிய கருத்தில், இந்த சம்பள விடயத்தில் நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடை தீர்ப்புக்குப் பட்டாசு கொளுத்தி, பாற்சோறு பொங்கிக் கொண்டாட வேண்டாமென அமைச்சர் ஜீவன், எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொண்டிருந்தார் எனவும்.

இதற்கு எதிராகவும், அமைச்சர் ஜீவன் தொண்டமானையும், அரசாங்கத்தையும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் 1,700 ரூபாய் சம்பள விடயத்தை விமர்சித்து ஊடகங்களுக்கு அறிக்கை விடுத்தமையை கண்டித்தும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இ.தொ.கவினரால் முன்னெடுக்கப்பட்டன.

மூன்று மாவட்டங்களில் ஐந்து பிரதான நகரங்களில் இந்த எதிர்ப்பு போராட்டம் அந்தந்த பிரதேசங்களுக்குப் பொறுப்பான இ.தொ.கா முக்கியஸ்தர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

கொட்டக்கலை, பொகவந்தலாவை, காவத்தை, தெஹியோவிட்ட மற்றும் பதுளை ஆகிய நகரங்களிலேயே மனோ கணேசனுக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

## 78 வயதான...

17 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரை பலாங்கொடை

நீதிமன்ற பதில் நீதவான் டி.எம் சந்திரசேகர முன்னிலையில், ஞாயிற்றுக்கிழமை (07) முன்னிறுத்தப்பட்ட போதே, விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபரின் உடல், உள பரிசோதனைகளை மேற்கொள்வதுடன், சமூக நோய்கள் தொடர்பில் அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறும், சந்தேக நபரை டி,என்,ஏ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டார்.

பலாங்கொடை- முகுனமலை பிரதேசத்தைச் சேர்ந்த எம்.எல்.சிரியாவதி என்ற பெண்ணொருவர் கடந்த 27ஆம் திகதி குளிப்பதற்காக தொரவெல ஆற்றுக்குச் சென்றிருந்த நிலையில், அன்றைய தினம் மாலை தொரவெல ஆற்றிலிருந்து குறித்த பெண், சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டு பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அவர் உயிரிழந்துள்ளமை

தொடர்பில் வைத்தியர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டதால் அது தொடர்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு வைத்தியர் அறிவித்திருந்தனர்.

அங்குச் சென்ற பலாங்கொடை நீதவான் பாக்யா தில்ருக்ஷி சட்ட வைத்தியரால் பிரேதப் பரிசோதனையை நடத்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

பலாங்கொடை ஆதார வைத்தியசாலையின் நிபுணத்துவ சட்ட வைத்திய அதிகாரி திருமதி ஐ.எல்.ரத்நாயக்க பிரேதப் பரிசோதனையை மேற்கொண்டபோது, அந்தப் பெண் பல சந்தர்ப்பங்களில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியிருப்பது உறுதி செய்யப்பட்டது.

கழுத்தையும் வாயையும் கட்டிக்கொண்டு பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கி கொலை செய்யப்பட்டுள்ளதாகச் சட்ட வைத்திய அதிகாரி மேற்கொண்ட பிரேதப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## "தேர்தலை பிற்போட...

தேர்தல்களை நடத்துவது அரசியலமைப்பின் பிரகாரம் இன்றியமையாத ஒரு விடயமாகும்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடங்களே என உயர்நீதிமன்ற ஆராய்வின் படி 2018ஆம் ஆண்டு 1ஆம் இலக்கம் தெளிவான தீர்ப்பின் மூலம் வழங்கி இருக்கும் நிலையில், உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அமைச்சரவையில் தீர்மானம் எடுத்து இதனை நிறைவேற்றிக் கொள்ள முயற்சித்து



வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறுகிறார். அவ்வாறான தீர்மானமோ கலந்துரையாடலோ மேற்கொள்ளப்படவில்லை என மறுபுறம் அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவிக்கிறார்.

இவ்வாறே சட்டத்துக்குப் புறம்பாக ரணில் விக்ரமசிங்க மாகாண சபை தேர்தலை பிற்போட பலரோடு இணைந்து செயற்பட்டார்.

தேர்தலை எவ்வாறேனும் பிற்போடவே தற்போதைய ஜனாதிபதி முயற்சிக்கிறார்.

செப்டெம்பர் 17 ஒக்டோபர் 16 குள் சட்ட ரீதியாகத் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி எந்த வேளையிலும் எந்த தேர்தல்களுக்கும் தயார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உயர் மட்ட சட்டத்தரணிகள் இடையீட்டு மனுதாரர்களாக நாளை மன்றில் ஆஜராகுவர்.

முதலில் ஜனாதிபதி தேர்தலும் பின்னர் பொதுத் தேர்தலும் நடத்தப்பட்டு இந்நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என வடக்கு கிழக்கு மலையகம் தெற்கு என சகல சமூகத்தினரினதும் நம்பிக்கையை வென்ற கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி திகழ்ந்து வருகிறது.

*மோசடி மிக்க மன்னார் கற்றாலை மின்உற்பத்தி நிலைய விவகாரங்கள் தொடர்பாகவும் கருத்துரைத்தார்.

*இந்த மோசடி மிக்க செயற்பாடுகளுக்கு இடங்கொடுக்காது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மக்களுக்குச் சார்பாக முதுகெழும்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

## "இந்தி படமொன்றை...

மூன்று பிள்ளைகளின் தந்தையான 42 வயதான நாலக சுரவீர அந்த கொடூரமான சம்பவத்தைப் பின்வருமாறு விவரித்தார்.

"நான், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பதுளை டிப்போவில் 24 வருடங்களாக பேருந்து சாரதியாகக் கடமையாற்றுகின்றேன். எனது கிராமம் தன்பங்குவ, அல்வத்த. நான் பதுளை-தன்னபங்குவ பேருந்தில் சில காலம் பணிபுரிகிறேன்.

கடந்த 5ஆம் திகதி பிற்பகல் பதுளையிலிருந்து தன்னபங்குக்கு ஆட்களை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்த போது. சொர்ணதொட்ட வெலிஹிந்த மலை வீதியில் பயணிக்கும் போது மரவெசாவில் இருந்து பழுதடைந்த பாரவூர்தி ஒன்று மலையிலிருந்து உருண்டு வருவதைக் கண்டேன். சுமார் 100 வேகத்தில் வந்தது.

நான் மிகவும் பயந்தேன். பயத்தில் பேருந்தை வழியிலிருந்து விலக்கி வீதியோரம் இருந்த கொங்கிரீட் தடுப்பில் கொண்டுபோய் நிறுத்தினேன். நான் குலுக்கத் தொடங்கினேன் முன்னால் பயணித்த லொரியை பார்த்தேன். அந்த லொறி பறந்து சென்று சாலையோரம் உள்ள மலையின் மேல் பகுதிகளில் மோதி. பாறையில் மோதி உயர் மின்கம்பிகளில் மோதி மூன்று முறை உருண்டு வீதியில் விழுந்தது.

லொறியின் பின்னால் இருந்தவர்கள் இடம் விட்டு இடம் வீசப்பட்டனர். ஒரு இந்திப் படத்தைப் பார்ப்பதைப் போல இருந்தது. பேருந்தில் இருந்து இறங்கிய பார்த்தேன், அதில் மாட்டிக் கொண்டவர்களும், தூக்கி வீசப்பட்டவர்களில் ஏற்கெனவே இரண்டு பேர் இறந்துவிட்டதாக உணர்ந்தேன். இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் அவ்வீதியில் சென்ற ஒரு எமோ டிரக் வாகனத்தில் ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்..

அதன் பிறகு நான் பேருந்தைச் செலுத்த விரும்பவில்லை. சுமார் 45 நிமிடம் பேருந்தை நிறுத்தி வைத்திருந்தேன். என் கைகால்கள் நடுங்க ஆரம்பித்தது மிகவும் சிரமப்பட்டு பேருந்தில் ஏறி தன்னபங்கு வரை அதே கியரில் சென்றேன். சுமார் ஒன்றரை மணி நேரம் ஆனது. இந்த சம்பவம் குறித்தும் எனது நிலை குறித்தும் டிப்போவுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தேன் என்றார்.

## "இடையீட்டு மனுதாரர் சார்பில் முன்னிலையாவேன்"

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் விளக்கமளிக்கப்படும் வரையில் ஜனாதிபதி தேர்தலைப் பிற்போடுமாறு கோரியுள்ள வழக்கில் இடையீட்டு மனுதாரர் தரப்பு சார்பில் தாம் முன்னிலையாகவுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

6 வருடங்களாக இருந்த பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதியின் பதவிக்காலம் அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தில் 5 வருடங்களாகக் குறைக்கப்பட்டது. மைத்ரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலப்பகுதியிலேயே இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. எனவே அதற்கு முன்னதாகவே பதவியேற்ற ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவரது பதவிக்காலம் குறித்து நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியிருந்தார். இதன்போது, முன்னிலையான சட்டமா அதிபர் தற்போதைய ஜனாதிபதியின் (மைத்ரிபால சிறிசேன) பதவிக்காலம் 6 வருடங்கள் எனவும் அதன் பின்னர் வருபவர்களின் பதவிக்காலம் 5 வருடங்கள் எனவும் வாதங்களை முன்வைத்தார்.

இருப்பினும் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்பதை உயர் நீதிமன்றம் பதிவுசெய்திருந்தது. தற்போது உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு தொடர்பில் எத்தகைய தீர்ப்பு வழங்கப்படும் அல்லது வழங்கப்பட வேண்டும் என்பது பற்றிக் கூற முடியாது.

இந்தநிலையில், அந்த மனு, திங்கட்கிழமை (08) ஆராயப்படவுள்ளது. அதன் இடையீட்டு மனுதாரர் தரப்பு தம்மை முன்னிலையாகுமாறு கோரியிருப்பதாகவும் அதன்படி தாமும் முன்னிலையாகவுள்ள தாகவும் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ. சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

## ஐயாவின் பூதவுடல்...



அவருடைய சொந்த ஊரான திருகோணமலையில் இறுதிக் கிரியை இடம்பெற்றதன் பின்னரே, அக்கினியுடன் சங்கமமானது.

உடல்நலக்குறைவு காரணமாகக் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த இரா. சம்பந்தன் கடந்த ஜூன் 30ஆம் திகதி இரவு காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 91 .

அவரது பூதவுடல், பொரளை தனியார் மலர்ச்சாலையில் பொதுமக்களுக்காக அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பாராளுமன்றில் புதன்கிழமை(03) அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அதன் பின்னர், அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்துக்குக் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு வகையான

வைரஸ் பரவுகிறது

ஒரு வகையான வைரஸ் காய்ச்சல், நாட்டு மக்கள் மத்தியில் பரவி வருவதாகப் பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் ஜி.விஜேசூரிய தெரிவிக்கின்றார்.

அவ்வாறு பாதிக்கப்படுவோருக்கு, காய்ச்சல், வாந்தி, இருமல் போன்ற நோய் அறிகுறிகள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ் பெரும்பாலும் சுவாசத்தின் மூலம் உடலுக்குள் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில், வைரஸ் தாக்கத்தைத் தவிர்த்துக்கொள்ள முகக் கவசம் அணிவது கட்டாயமாகுமென அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இரண்டு நாட்களுக்கு அதிகமாகக் காய்ச்சல் காணப்படும் பட்சத்தில், வைத்தியர் ஒருவரை நாடுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். எனினும்,இந்த வைரஸ் தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் ஜி.விஜேசூரிய தெரிவிக்கின்றார்.

## முட்டைக்கு 'வற்'

முட்டை விலையில் 15 சதவீத 'வற்' விதிக்கப்பட உள்ளதென அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயலாளர் எச்.எம்.டி.ஆர்.அழககோன் தெரிவித்துள்ளார்.

இதனால் நுகர்வோர் அதிகாரசபை நிர்ணயித்த விலைக்கு முட்டைகளை விற்பனை செய்ய முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முட்டைக்கான அதிகபட்ச விலையைக் கடந்த செவ்வாய்க்கிழமை (02) முதல் அமுலுக்கு வரும் வகையில் நுகர்வோர் அதிகாரசபை மீண்டும் நிர்ணயித்துள்ளது.

அதற்கமைய, வெள்ளை முட்டை 43-47 ரூபாய்க்கும், பழுப்பு நிற முட்டை 45-49 ரூபாய்க்கும் விற்கப்பட வேண்டும்.

“நவீன காலத்திற்கு ஏற்றாற் போல்

# கல்வித் திட்டம் மாறவில்லை”

எமது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். இந்த உரிமைகள் தவிர, பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம், கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், வீடு மற்றும் காணி உரிமையும் அடிப்படை உரிமைகளாக உள்ளடக்கப்பட வேண்டும். நவீன காலத்திற்கு ஏற்றாற் போல் கல்வி மாறவில்லை என்றால் அது மாணவர்களினது அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் பேருந்து வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் காலி ஓல்கொட் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கும் நிகழ்வில் சனிக்கிழமை (06) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



மேலும் அவர் கூறியுள்ளதாவது,

வங்குரோத்தான நாட்டில் இந்த திட்டங்களை முன்னெடுக்கும் போது கூட ஒரு தரப்பினர் பரிகாசம், கிண்டல், நக்கல், கேலி செய்து வருகின்றனர். இந்த திட்டங்களை செயல்படுத்துவது அவர்களது பார்வையில் தவறாகத் தெரிகிறது. இந்த விமர்சனங்களை முன்வைத்து வருபவர்களுக்குப் பிள்ளைகள் பட்டு வரும் துயர் குறித்து அறியாதவர்களாக இருந்து வருகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் தொற்றுநோய் மற்றும் வங்குரோத்து நிலை போன்றவற்றால் ஏற்பட்ட சூழ்நிலைகளை இந்நாட்டில் இலவசக் கல்வியால் நன்மையடைந்து வரும் பிள்ளைகளும் அவர்களது பெற்றோர்களும் எதிர்கொண்டனர். பிள்ளைகளுக்கு அன்றாட உணவு உள்ளிட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க முடியாமல் பெற்றோர்கள் தவித்து வருகின்றனர்.

அத்துடன், சில பாடசாலைகளில் பிள்ளைகள் உணவின்றி பட்டினியால் வாடுகின்றனர். இதுபோன்ற சூழ்நிலையில் நாட்டின் கல்வித்தரத்தை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். பிள்ளைகளைப் பிரித்து ஒதுக்கக் கூடாது. எந்த நேரத்திலும் பிள்ளைகளைப் பிரித்து நோக்கக் கூடாது. மதிய உணவு கூட வேறுபாடின்றி அனைத்து பிள்ளைகளுக்கும் வழங்கப்பட வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி அரசில் இதனை ஓர் தேசிய கொள்கையாக முன்னெடுப்பேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளனர்.

## “ஆசையாக இருந்தது திருடினேன்”




■ எம்.றொசாந்த்

“மோட்டார் சைக்கிளைப் பார்க்க ஆசையாக இருந்தது. அதனால் அதனைத் திருடிச் சென்றேன்” என யாழில் மோட்டார் சைக்கிள் திருட்டு குற்றத்தில் கைதான இளைஞனொருவர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கடந்த மாதம் 26ஆம் திகதி யாழ். நீதிவான் நீதிமன்றுக்கு அருகில் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.


சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டதில் 24 வயதான சந்தேகநபரை சாவகச்சேரி பகுதியில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிளும் 01 கிராம் 30 மில்லி கிராம் அளவான ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றுக்கு வருகை தந்தபோது “வெளியே நின்ற மோட்டார் சைக்கிளைப் பார்க்க ஆசையாக இருந்தது. அதனால் அதனைத் திருடிச் சென்றேன்” என சந்தேக நபர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## விபத்தில் குடும்பஸ்தர் மரணம்



கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் இருந்து சனிக்கிழமை(06) பகல் பூநகரி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாணத்தில் இருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த கெப்ரக வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் உயிரிழந்த நிலையில், மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ் விபத்தில் கிளிநொச்சி கோனாவில் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காகக் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

“அல்ஹாஜ் எம்.எம்.இக்பாலின் மறைவு

## புத்தளம் மண்ணுக்கு பேரிழப்பு”

“சமூகங்களின் இணக்கப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் முன்நின்று செயல்படக்கூடிய ஒரு சிறந்த மனிதரை புத்தளம் சமூகம் இழந்திருக்கின்றது” என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

புத்தளம் பதில் நீதவானும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான அல்ஹாஜ் எம்.எம். இக்பாலின் மறைவு தொடர்பில், அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“புத்தளம் நகரத்துக்கு பெருமை சேர்த்தவர்களில் மர்ஹூம் இக்பால் மிகவும் முக்கிய பங்கினை ஆற்றியுள்ளார். அதேபோன்று, கல்விச் செயற்பாடு முதல் சமூக சேவைகளிலும் முன்னின்று, சமூகத்தின் தேவையறிந்து நிதானமாகச் செயல்படக்கூடிய ஆற்றல் கொண்ட ஒருவராக மர்ஹூம் இக்பால் அவர்களை நான் பார்க்கின்றேன்.

எனது அரசியலில் ஆரம்பக்காலத்தில், புத்தளத்தில் நான் கண்ட மிகவும் பெறுமதியான, எந்த சந்தர்ப்பத்திலும் நல்ல ஆலோசனைகளை எடுத்துக்கூறக்கூடிய, சிறந்த மனம்கொண்ட ஒருவராக மர்ஹூம் இக்பால் அவர்கள் இருந்திருக்கின்றார்.

புத்தளத்திற்கு ஒரு சிறந்த அரசியல் தலைமைத்துவம் வரவேண்டும் என்பதற்காகவும், அந்த அரசியல் தலைமைத்துவம் அனுபவ ரீதியான தீர்மானங்களை முன்னெடுக்கக்கூடிய பக்குவம் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதிலும் மிகவும் கண்ணும் கருத்துமாக, கருத்துக்களைப் பதிவிட்டு வந்த ஒருவராக இக்பால் காணப்பட்டார்.

புத்தளத்தில் வாழும் பெரும்பான்மைச் சமூக மக்கள் மத்தியில், சிறந்த நாமத்தைப் பதித்துக்கொண்ட அன்னாரின் மறைவு புத்தளம் சமூகத்துக்குப் பேரிழப்பாகும். அன்னாரது இழப்பால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும், அவர் மீது அன்புகொண்டு செயல்பட்ட புத்தளம் சமூகத்துக்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

## யுவதி சடலமாக மீட்பு; அறுவருக்கு விளக்கமறியல்



■ தீஷான் அஹமட்

திருகோணமலை-மூதூர் பொலிஸ் பிரிவில் உள்ள கிளிவெட்டி பகுதியில் உள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து 25 வயது யுவதி ஒருவரின் கடந்த சடலம் வெள்ளிக்கிழமை(05) மாலை மீட்கப்பட்ட பின்னணியில், 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு மூதூர் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, அவர்களை இம்மாதம் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த யுவதியின் சடலத்தை பாழடைந்த கிணற்றில் போட்டு அதற்கு மேல் குப்பைகளை குவித்துள்ளனர் என்று சந்தேகிக்கப்படும் காதலனின் தந்தை, சித்தப்பா, சகோதரி அத்துடன், குப்பைகளை எடுக்க உதவிய பெக்கோ இயந்திரச் சாரதி, பெக்கோ வாகன தரகர் மற்றும் கொலை செய்யப்பட்டதை வெளிப்படுத்திய சந்தேக நபர் என ஆறு சந்தேகநபர்களுமே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாழடைந்த கிணற்றில் சடலமொன்று கிடப்பதாக வெள்ளிக்கிழமை (05) மூதூர் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், கிணற்றை சோதனையிடுவதற்காக, மூதூர் பொலிஸார் நீதிமன்ற அனுமதியை பெற்றிருந்தனர்.

இந்நிலையில், குறித்த கிணறானது மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் முன்னிலையில் பெக்கோ இயந்திரம் மூலம் ஞாயிற்றுக்கிழமை (07) அகழ்வு செய்யப்படபோது சடலம் மீட்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சேருநுவர-தங்கநகர் பகுதியைச் சேர்ந்த நடேஸ்குமார் வினோதினி வயது (25) என தெரியவருகின்றது.

மீட்கப்பட்ட சடலமானது சேதமடைந்த நிலையில் காணப்பட்டுள்ளதுடன், யுவதியின் கைப் பையும் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த யுவதி, காதலனினால் கொலை செய்யப்பட்டு கிணற்றினுள் வீசப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படும் நிலையில், 25 வயதான காதலன் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த யுவதியின் சடலம் பிரேதப் பரிசோதனைகளின் பின்னர் சனிக்கிழமை (06) மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க

# ஆடிவேல்விழா கொடியேற்றம்

■ கதிர்காமத்திலிருந்து வி.ரி.சகாதேவராஜா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா மகோற்சவ கொடியேற்றம் சனிக்கிழமை (6) மாலை பஸ்நாயக நிலமே திஷான் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கிரிவெஹர விஹாராதிபதி கோபவக தம்மிந்த நாயக்க, கதிர்காமம் ஸ்ரீ அபிநவரம்திபதி சாஸ்த்ரபதி கபுகம சரணதிஸ்ஸ நஹிமி, பஸ்நாயக்க நிலமே திஷான்,பரிவார ஆலய குரு சிவ ஸ்ரீ தங்கவேல் குருக்கள் உட்பட சமய தலைவர்கள் கலந்து கொண்டனர்.

சரியாக மாலை 5.28 மணிக்கு அங்குள்ள பள்ளிவாசலில் அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க கொடியேற்றம் நடைபெற்றது. நிகழ்வில் இனமதபேதம் இன்றி பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக 16 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 22ஆம் திகதி மாணிக்க கங்கையில் தீர்த்த உற்சவம் இடம் பெறும்.















# மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முயற்சி அவசியம்

கடந்த வாரத்தில் அதிகம் பேசப்பட்ட விடயமாக ஜனாதிபதி பதவிக்காலம் 5 ஆண்டுகளா அல்லது 6 ஆண்டுகளா என்பதை தெளிவுபடுத்துமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் சி.டி.லெனாவ எனும் நபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு பற்றியதாக இருந்தது.

இருதரப்பு வெளிநாட்டுக் கடன்கள் மறுசீரமைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததைத் தொடர்ந்து, நாட்டு மக்கள் மத்தியில் உரையாற்றியிருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தாம் முன்னெடுக்கும் இந்த கடினமான பொருளாதார மறுசீரமைப்பு பணிகளில் தம்முடன் இணைந்து பயணிக்க நீங்கள் தயாரா? பயணிப்பீர்களா என ஆணித்தரமாக கோரியிருந்ததனூடாக, தொடர்ந்தும் அவருக்கு இந்தப் பதவியில் இருப்பதற்கான எதிர்பார்ப்பு அல்லது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் எனும் ஒரு சமிக்ஞையை வழங்கியுள்ளது.

ஒக்டோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், கடந்த வாரம் தாக்கல் செய்யப்பட்ட இந்த உரிமை மீறல் மனுவின் பிரகாரம், இந்தத் தேர்தல் பிற்போடப்படுவதற்கு சாதகமான தீர்ப்பொன்று வழங்கப்படுமாயின், மீண்டும் நாட்டில் அமைதியற்ற ஒரு சூழல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

ஏனெனில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கடுமையான மும் முனைப் போட்டி நிலவும் என அரசியல் ஆய்வாளர்கள் எதிர்வுகூரியுள்ள நிலையில், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மக்களைத் திரட்டி, இந்த தீர்மானத்துக்கு எதிராக தம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்வர்.

இந்நிலையில் மொட்டுக் கட்சியினர் தமது சொந்த வேட்பாளரைக் களம் இறக்குவதா அல்லது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பதா என்பது தொடர்பில் முரணான கருத்துகளை முன்வைத்து வரும் நிலையில், அந்தக் கட்சியினுள் விரிசல் ஏற்பட்டுள்ளது என்பதை அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில், ஜனாதிபதி விக்ரமசிங்கவுக்கு பொது மக்கள் மத்தியில் போதியளவு ஆதரவு உண்டா இல்லையா எனும் ஒரு சந்தேகம் காணப்படும் நிலையில், பெருமளவான வாக்காளர்கள் தமது வாக்கை எவருக்கு வழங்குவது எனும் தீர்மானத்தை இன்னும் மேற்கொள்ளாமல் மதில்மேல் பூனை போன்றே உள்ளனர்.

இந்நிலையில், தேர்தலுக்கு அஞ்சி, பதவி பறிபோய்விடும் என்ற அச்சத்தில் தேர்தலை பிற்போடுவதற்கான முயற்சிகளைத் திரைக்கு மறைவிலிருந்து மேற்கொள்வதில் அக்கறை காண்பிக்காமல், பொது மக்கள் மத்தியில் சென்று, தமது திட்டங்களைத் தெளிவுபடுத்தி வினைத்திறனான வகையில் தமது பிரசார செயற்பாடுகளை மேற்கொண்டு, மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாறாக, தேர்தலை பிற்போடுவது அல்லது ஒத்தி வைப்பது என்பது நிலைமையை மேலும் மோசமாக்கி, நாட்டில் குழப்ப நிலைகளைத் தோற்றுவித்து, கடந்த ஒன்றரை வருட காலப்பகுதியில் எய்திய சற்று மூச்சுவிடக்கூடிய சூழ்நிலை மீண்டும் கேள்விக்குறியாகி, வரிசை யுகத்துக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிடலாம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# சம்பந்தர் - தேசிய ஒருமைப்பாட்டுக்கு அகிம்சை வழி

லக்ஸ்மன்

ஆயுத வழியில் தமிழர்களின் அரசியல் உரிமைக்கான போராட்டத்தினை நடத்தி வெற்றியை அடைந்துகொள்ளலாம் என்ற நோக்கம் தமிழ் மக்களினதும், தமிழ் அரசியல் தலைவர்களதும் அகிம்சைவழிப் போராட்டத்தின் தோல்வியினாலேயே கருக்கொண்டது. அவ்வாறு கருக்கொண்ட ஆயுத வழிக்கு வித்திட்டவர்களும் அரசியல் தலைவர்களே. இருந்தாலும்.

ஆயுத வழிப் போராட்டமானது சர்வாதிகாரத் தனமாகவும் தான்தோன்றித் தனத்துடனும் வன்முறைக் கலாசாரத்துடனும் நடைபெறுவதாக ஒரு நிலைக்கு அப்பால் அந்த ஆயுதப் போராட்டத்தினை வெறுத்தவர்களும் எதிர்த்தவர்களும் தமிழ் அரசியல் தலைவர்களே. அவ்வாறான தலைவர்களுள் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக் கட்சியினரே அதிகம்.

அரசியல் தலைவர்களே மக்களின் அரசியல் நிலைப்பாட்டையும் அரசியல் நகர்வையும் தீர்மானிப்பவர்களாக இருப்பது வழமையாகும். அது போலவே தமிழ் மக்களுடைய அரசியல் விடுதலைப் போராட்டத்தில் தமிழ் அரசியல் கட்சிகளும் தங்களுடைய முனைப்புகளை எடுத்திருந்தனர்.

இலங்கை சுதந்திரமடைந்தது முதல் அகிம்சை வழிப் போராட்ட மரபினைக் கைக்கொண்டு மேற்கொண்ட நகர்வுகள் தோற்றன. அதனால் 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஈழத்துக் காந்தி என வர்ணிக்கப்பட்ட சா.ஜே.வே.செல்வநாயகம் தலைமையில் நடந்த குறித்த மாநாட்டில் செல்வநாயகம் முன்மொழிய மு.சிவசிதம்பரம் வழிமொழிந்து இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தமிழீழத் தனியரசை முன்வைத்ததோடு அதனை அடையத் தமிழ் இளைஞர்களை ‘புனிதப் போருக்கு’ அழைக்கும் அறைகூவலையும் தந்தை செல்வா விடுத்தார். ஏறத்தாழ 20 வருடங்களாகத் தோல்வி கண்ட பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் சமரச முயற்சிகள் காரணமாக உருவான இந்த நிலைப்பாட்டுக்கு 1977இல் நடைபெற்ற தேர்தலில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் முழுமையான ஆதரவினை வழங்கி அத் தீர்மானத்துக்கு உறுதிப்படுத்தலும் கொடுத்திருந்தார்கள்.

தந்தை செல்வா விடுத்த புனிதப் போருக்கான அழைப்பே பின்னாளில் ஆயுத இயக்கங்களின் தோற்றத்துக்கு வழிவகுத்திருந்தது. அதன் பின்னர், திம்பு பேச்சு நடைபெற்றது. இருந்தாலும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்திற்கான தீர்வுகளின்றியே நகர்வுகள் இருந்தன. ஈழத் தமிழர்களாகிய எமது போராட்ட வரலாறு இந்த உலகின் ஏனைய போராட்ட அமைப்புகளிலிருந்து முற்றிலுமாக வேறுபட்ட ஒன்றாகக் காணப்பட்டது என்றே கூறலாம்.

அதே போன்றே தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தில் வரலாற்று வழியில் முக்கியமான ஒன்றாக 1987இல் நடைபெற்ற சுதுமலைப் பிரகடனத்தினைக் கூறமுடியும். அன்றுதான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மக்கள் முன் தோன்றிப் பேசியிருந்தார்.

ஆயுத போராட்ட வடிவத்தை ஊக்குவித்து பின் அத்தனை ஆசைகளையும் நிராசைகளாக்கிய இந்திய அரசு ஒருதலைபட்சமாக இலங்கை அரசுடன் மேற்கொண்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு டெல்லிக்கு அழைத்து வற்புறுத்தப்பட்டது குறித்தும் அதனைத் தாம் ஏற்றுக்கொள்ளமை குறித்தும் தமிழர்களின் பிரச்சினைக்குத் தமிழீழ தனியரசு ஒன்றே தீர்வென தமது நிலைப்பாட்டை இந்திய அரசுக்குத் திட்டவட்டமாகக் கூறியது குறித்தும் வே.பிரபாகரன் சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் உரையாற்றியிருந்தார். அதன் பின்னர் நிகழ்ந்த திருப்புமுனைகளும் இந்திய இராணுவத்தின் வருகையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும் பட்டவர்த்தனமே.

இவ்வாறான வரலாற்றுப் பின்புலத்தில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுமா? என்பதைப் பற்றி இப்போதும் சந்தேகத்துடனேயே நாம் பார்க்கவேண்டிய நிலைமைக்கு எது காரணம், எதனால் இவ்வாறிருக்கிறது என்றெல்லாம் நாம் ஆராய்வது வீணே. இப்போதும் நாம் 1987இல் ஏற்படுத்தப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தினையேனும் முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்றுதான் நம்முடைய தமிழ்த் தேசிய அரசியல் கோரிய வண்ணமிருக்கிறார்கள்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் வாக்குறுதிகளை நம்புவதும் காத்திருப்பதுமே நடைபெற்று வந்திருக்கின்றன. ஆனால், அவற்றுக்குப் பிரதிபலனாக ஏமாற்றங்களே கிடைத்துமிருக்கின்றன. இதற்கு இந்திய-இலங்கை ஒப்பந்தம், அதன் பின்னரான பேச்சுவார்த்தைகள் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் நிகழ்ந்த ஐ.நா மனித உரிமைப் பேரவை தீர்மானம் அதன் பின்னர் உருவான நிலைமாறு கால நீதிப் பொறிமுறை, நல்லிணக்கப் பொறிமுறை என அனைத்தின் ஊடாகவும் இதுவரையில் பயன் ஏதும் விளையவில்லை என்பதே நிதர்சனம்.

யுத்தம் 2009இல் முள்ளிவாய்காலில் மௌனிக்கப்பட்ட பின்னர், மீண்டும் தமிழ் அரசியல் தலைவர்கள், அகிம்சை வழி அறவழியில் போராடினோம், ஆயுத வழி பின்னர் வந்தது. அதன் மௌனிப்பின் பின்னர் அறவழியுடன் இராஜதந்திரப் போராட்டத்தினையும் நடத்தவேண்டி நிர்ப்பந்திக்கப்படுகிறோம் என அறிக்கைகளையும் வீசியெறிந்திருந்தனர்.

இந்த இடத்தில் தான் கடந்தவாரம் காலமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் தமிழரசுக்கட்சியின் தலைவராகவும் இருந்த இரா சம்பந்தன் தொடர்பில் வெளிவந்து கொண்டிருக்கின்ற கருத்துக்களும் விமர்சனங்களும் அவற்றுக்கான பதில்கள் தொடர்பிலும் நாம் உரையாடவேண்டியிருக்கிறது. தமிழ்த் தலைவர்களுடைய கருத்துக்களைவிடவும் முக்கியமாக சிங்கள, முஸ்லிம் மக்களது அரசியல் தலைவர்கள் வெளியிடுகின்ற கருத்துக்கள் மீது நாம் பார்வையைச் செலுத்தவேண்டியிருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் சம்பந்தரின் மறைவையொட்டி வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில், தமிழ் சமூகத்துக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் இடையிலான உறவின் இணைப்புப் பாலமாக சம்பந்தன் விளங்கியதாகவும், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான சாத்வீகப் போராட்டம் பின்னர் நாளடைவில் மாற்றமடைந்த அரசியல் சூழ்நிலைகள் காரணமாகத் திசை மாறிய போதிலும் கூட, அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தைகளைத் தமிழர் தரப்புகளுக்கும் சிறுபான்மையினருக்கும் ஏற்புடையதான விதத்தில் கருத்தொருமைப்பாட்டைகாணும் நோக்குடன் முன்னெடுப்பதில் சம்பந்தன் ஐயா நாட்டம் கொண்டிருந்தார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பொறுத்தவரை அதன் முக்கிய அம்சங்களில் ஒன்றான வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு அங்கு வாழும் முஸ்லிம்களின் இணக்கப்பாடு இன்றி சாத்தியமாகிவிடாது என்பதில் சம்பந்தன் மிகுந்த உறுதியாக இருந்து வந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். இது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது.


அதே நேரத்தில், அவருக்குச் செலுத்தக்கூடிய நன்றிக் கடன் இனப் பிரச்சினைக்கான தீர்வில் தமிழ் மக்களும், தமிழ் பேசும் மக்கள் உள்ளடங்கிய சிறுபான்மையினரும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் போது குறைந்தபட்ச சேதாரங்களோடு அவசியமான விட்டுக்கொடுப்புகளை ஒவ்வொரு தரப்பும் செய்து நாட்டில் நிலையான சமாதானத்தை நிலை நாட்டுவதற்குப் பாடுபடுவதாகும் என்ற ரவூப் ஹக்கீம் அவர்களுடைய கருத்தானது உண்மையில் தமிழ் முஸ்லிம் மக்கள் எடுக்கவேண்டிய அரசியல் தீர்மானத்தினைக் குறித்து நிற்கிறது. இந்தத் தீர்மானம் தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒரு ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் என்றே கூற வேண்டும்.

அதே போன்று முன்னாள் அமைச்சரும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் ஹசன் அலியின், தமிழ் பேசும் சமூகங்களுக்கிடையிலான நீடித்த ஒற்றுமையின் மூலமாகவே சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை பெரும்பான்மை சமூகத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று விசுவாசித்து தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் இடைவெளி இல்லாமல் செயற்பட்டவர் என்ற கருத்து முஸ்லிம் சமூகத்தினரின் தேசிய ஒற்றுமை தொடர்பிலான பங்கினையே காட்டிநிற்கிறது.

இது போன்ற பல்வேறு கருத்துக்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளிடமிருந்து வெளிப்பட்டிருக்கின்றன. இந்த வெளிப்பாடுகள் முஸ்லிம் மக்களின் உணர்வுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையின் தீர்வுக்காகப் பாடுபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இறுதிக் கனவுக்காக முஸ்லிம்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

அதே போன்றே, சிங்கள அரசியல் தலைவர்களும் பெருந்தன்மையாகப் பல கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். குறிப்பாக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர் டளஸ் அழகப்பெரும, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பிரதமர் தினேஷ் குணவர்த்தன போன்றவர்களைக் குறிப்பிடமுடியும்.

ஒவ்வொரு அரசியல் தலைவருடைய மறைவிலும் பல்வேறு நல்ல விடயங்கள் வெளிப்படுவதும் அவை நினைவில் இல்லாது மறக்கப்படுவதும் நடைபெறுவது வழமையே அவ்வாறில்லாது வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்த ஒரு தலைவரின் மறைவின் பின்னராவது, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பான தீர்வுக்கு பெருந்தேசிய தலைவர்களும், சிங்கள பெரும்பான்மை சமூகத்தினரும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் சம்பந்தரின் அகிம்சைவழியிலான தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஒத்துழைக்க வேண்டும். அது நடைபெறும் என்றும் நம்புவோம். சம்பந்தர் போன்று நம்பிக்கையும் கொள்வோம். தமிழர் அரசியலின் தலைவிதியும் அதுவே.



## வாழ்வியல் தரிசனம்

இருண்ட மனதைப் போக்கினால் தான் இன்பம் சூழும். இதற்கு என்ன வழி?

மக்கள் சேவைக்குள் புகுந்துவிடுக. உண்மையான மக்கள் சேவையே, மகேசன் சேவை என்பதை உணர்வீர்கள். இதயத்தில் நிம்மதி ஒளிவிடும். தன்னை மறந்து, புது உலகில் தவழ, இந்த வழியையே, புத்திசாலிகள் விருப்பத்துடன் செய்கின்றார்கள்.

உங்கள் உடல் வலுவுக்கு ஏற்ப, விரும்பும் நற்செயலுடன் இணைக. சிறிது நேரமாவது செய்யும் நற்காரியங்கள், விஸ்வரூபமாக மாறும், செய் கருமங்களும் பெருகும்.

உங்களை நோக்குபவர்கள், உங்களுடன் தொடர்ந்து பயணிப்பார்கள். செய்து பாருங்கள்! அதன் புதுமையும் அற்புதங்களும் நன்கு புரியும்.

எங்களால் யாராவது, நல்ல பயனைக் கண்டால், அதைவிடத் திருப்தி ஏது? சமானிய மனிதன், மகா மனிதனாக மாறியது, இதுபோல என்பதை அறிவீர்களா?

வாழும் வழியைச் சுலபமாக்குங்கள். நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழும் வழியைத் தேர்ந்தெடுங்கள். நல்லதைச் செய்ய ஏது சுணக்கம்? உடன் எழுக.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### குடிநீரை உடனடியாக விநியோகியுங்கள்



கிளிநொச்சி-அக்கராயன் பகுதியில் நீர்த்தாங்கியில் இருந்து 250இற்கு மேற்பட்ட குடும்பங்களில் ஒரு பகுதியினர் குடி நீருக்கான பணம் செலுத்தப்படவில்லை எனக் கூறி கடந்த இரு மாதங்களாகக் குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் தற்போது பெரும் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மனிதாபிமான அடிப்படையில் நீர்த் தாங்கிகள் மூலமாவது குடிநீரினை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் தற்போது குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள அக்கராயன் மத்தி, கிழக்கு, மேற்கு, கெங்காதரன் குடியிருப்பு ஆகிய மக்களின் குடிநீர்த் தேவையினை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- நடராசா கிருஸ்ணகுமார்

# அன்லிமிடெட் அழைப்புகளை வழங்கும் SLT-MOBITEL

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, குடும்பத்தார் மற்றும் சிறு வியாபாரங்களை இலக்காகக் கொண்டு அன்லிமிடெட் அழைப்பு பக்கேஜ்களை அறிமுகம் செய்துள்ளது.

தெளிவான, தடங்கலில்லாத குரல்சார் தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு வாடிக்கையாளர்கள் SLT-MOBITEL இன் நிலையான இணைப்பில் தங்கியிருப்பதை உணர்ந்துள்ளது. அன்லிமிடெட் அழைப்புகளை வழங்கும் பக்கேஜினூடாக, அழைப்புகளை மேற்கொள்ளும் போது காணப்படும் சகல கட்டுப்பாடுகளையும் நீக்கி, தெளிவான மற்றும் தங்கியிருக்கக்கூடிய நிலையான இணைப்பு வலையமைப்பை வழங்குகின்றது.

SLT-MOBITEL என்பது பகிரப்பட்ட குடும்ப வளமாக அமைந்திருப்பதை உணர்ந்துள்ளது. பக்கேஜின் குடும்பத்துக்கு நட்பான வழிமுறையினூடாக, முழு இல்லாத்தாருக்கும் வரையறைகளற்ற அழைப்புகளை எவ்விதமான கட்டுப்பாடுகளுமின்றி அனுபவிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. நிலையான இணைப்பில் அன்லிமிடெட் அழைப்புகள் வசதியை பயன்படுத்தும் சகல குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் இதர வாடிக்கையாளர்களுக்கு இந்தப் பக்கேஜ் மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளது.

SLT-MOBITEL அன்லிமிடெட் அழைப்புகள் பக்கேஜினூடாக, எந்தவொரு மொபைல் அல்லது நிலையான இணைப்பு வலையமைப்புக்கும் அன்லிமிடெட் குரல் அழைப்புகளை மேற்கொள்ளும் வசதியை வழங்குவதுடன், ஒப்பற்ற மாதாந்த வாடகையில், நிகரற்ற பெறுமதியை சேர்க்கின்றது. தங்கியிருக்கக்கூடிய, உயர் தரம் வாய்ந்த தொடர்பாடல் தீர்வுகளை நாடும் குடும்பத்தார் மற்றும் சிறு வியாபாரங்களுக்கு இந்தப் பக்கேஜ் மிகவும் அனுகூலமளிப்பதாக அமைந்திருக்கும்.




பிற்கொடுப்பனவு பக்கேஜ், ரூ.747 மட்டுமாக அமைந்துள்ளது (வரிகள் நீங்கலாக), இதனூடாக சிறந்த சகாயத்தன்மை வழங்கப்படுகின்றது. சந்தையில் காணப்படும் இதர தெரிவுகளைப் போலன்றி, இந்தப் பக்கேஜ் SLT-MOBITEL வலையமைப்புகளுக்கு மாத்திரம் மட்டுப்படாமல், எந்தவொரு உள்நாட்டு மொபைல் அல்லது நிலையான இணைப்பு வலையமைப்புக்கும் பரந்த இணைப்புத் திறன் வசதியை வழங்குகின்றது.

SLT-MOBITEL இன் பிற்கொடுப்பனவு பக்கேஜினூடாக, நிமிடங்கள் தீர்ந்துவிடும் எனும் கவலையை போக்கி, நிலையான, தடங்கலில்லாத சேவை வழங்கப்படுகின்றது. மேலும், SLT-MOBITEL இனால் இணைப்புகள் இழப்பு அல்லது மேலதிக பாவனை கட்டணங்களின்றி, தெளிவான, பாதுகாப்பான, உயர் தரம் வாய்ந்த குரல் அழைப்புகள் வழங்கப்படுகின்றது. இந்த பக்கேஜினால் தங்கியிருக்கும் திறன் மற்றும் வாடிக்கையாளர் தன்னிறைவு ஆகியன உறுதி செய்யப்படுகின்றன.

புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய தீர்வுகள் போன்றவற்றுக்கான SLT-MOBITEL இன் அர்ப்பணிப்பை உறுதி செய்து, இந்தப் பக்கேஜினூடாக, எவ்விதமான மேலதிக பாவனை கட்டணங்களுமின்றி, ஏற்கெனவே காணப்படும் தொலைபேசி இலக்கத்தில், வாடிக்கையாளரின் வளாகத்தில் காணப்படும் சாதனத்தில் பயன்படுத்தும் வசதி வழங்கப்படுகின்றது. எவ்வாறாயினும், அவசியமான சாதனங்களை (CPE) SLT-MOBITEL இடமிருந்து மேலதிகமாக ரூ.155.00 செலுத்தி பெற்று, ஒப்பற்ற இணைப்பு மற்றும் பாவனையை உறுதி செய்து கொள்ளலாம்.

நிகரற்ற சௌகரியத்தையும், அன்லிமிடெட் அழைப்பு பக்கேஜின் பெறுமதியையும் அனுபவிப்பதற்கு வாடிக்கையாளர்களை SLT-MOBITEL அழைக்கின்றது.

## Prime Group காலி கிளையை இடம்மாற்றியுள்ளது

Prime Group தனது காலி கிளையை, இல-66, ஹவ்லொக் வீதி, காலி எனும் முகவரிக்கு இடம் மாற்றியுள்ளது. அதனூடாக, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் கிளையை கொண்டுள்ளதுடன், தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தப்பட்ட இடவசதியையும் கொண்டுள்ளது. Prime Groupஇன் பயணத்தில் இந்த நகர்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக அமைந்திருப்பதுடன், பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சௌகரியம், நவீன உட்கட்டமைப்பு மற்றும் சிறந்த சேவையை பெற்றுக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பை மீள உறுதி செய்வதாகவும் அமைந்துள்ளது.

புதிய கிளையின் உட்கட்டமைப்பு மற்றும் செயன்முறைகள் போன்றன மேம்படுத்தப்பட்டு, உயர் தரம் வாய்ந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் ஒப்பற்ற அணுகல் திறன் போன்றவற்றை பெற்றுக் கொடுப்பதாக அமைந்திருப்பதுடன், Prime Groupஇன் பெருமைக்குரிய வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்திய அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது. உள்ளக நிபுணத்துவத்தைக் கொண்டு, Prime Group இனால் பல முக்கியத்துவம் வாய்ந்த மேம்படுத்தல்கள் புதிய பகுதியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அதில் கொடுப்பனவு மற்றும் கொள்முதல் மாதிரிகளில் கவனம் செலுத்தப்படும் automated ERP கட்டமைப்பின் ஒன்றிணைப்பு மற்றும் மீளசெயற்படுத்தல் செயன்முறை போன்றன அடங்கியுள்ளன. இந்த மேம்படுத்தல்களினூடாக ஒழுங்கமைக்கப்பட்ட பணிச்செயற்பாடுகள், தரவுகள் அடிப்படையிலான கண்காணிப்பு, பாரம்பரிய கடதாசி பதிவுகளில் தங்கியிருக்கும் தன்மையில் வீழ்ச்சி மற்றும் வலிமைப்படுத்தப்பட்ட செயற்பாட்டு மேற்பார்வை போன்றன உறுதி செய்ய எதிர்பார்க்கப்படுவதுடன், வாடிக்கையாளர்களுக்கு தமது கோரிக்கைகளுக்கு வினைத்திறனான பதில்களையும், ஒப்பற்ற அனுபவத்தையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.


Prime Group இன் தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "தொழிற்துறையின் முன்னோடிகள் எனும் வகையில், பெறுமதி வாய்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் தெரிவுக்கமைவான ரியல் எஸ்டேட் மற்றும் வதிவிட தீர்வுகளை வழங்குகின்றோம். காலி நகரின் மையப் பகுதியில் புதிய இடத்தில் எமது செயற்பாடுகளை முன்னெடுப்பதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். Prime Group இன் காலி கிளையின் மூலோபாய இடம்மாற்றம் என்பதனூடாக, விரிவாக்கத்துக்கான எமது அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், எமது வாக்குறுதியை நிறைவேற்றுவதில் காணப்பிக்கும் உறுதித்தன்மையையும் வெளிப்படுத்தியுள்ளது. தூரநோக்குடைய தலைமைத்துவத்தை வழங்குகின்றமைக்காக, குழும தவிசாளர் பிரேமலால் பிராஹ்மனகே அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.




எமது நிறுவனத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதற்கான ஒப்பற்ற அர்ப்பணிப்புக்காக எமது பிரதம நிறைவேற்று அதிகாரி ருமிந்த ரந்தெனிய அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சௌகரியம் மற்றும் செயற்பாட்டு வினைத்திறன் போன்றவற்றை பெற்றுக் கொடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பை இந்த புதிய இடம் உறுதி செய்கின்றது. தொழிற்துறையின் முன்னோடிகளாக எம்மை வேறுபடுத்திக் காண்பிக்கின்றது" என்றார்.

தென் கரையோரப் பகுதியில் பல்வேறு புதிய செயற்திட்டங்களை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக Prime Group அறிவித்துள்ளது. அதில், வெலிகம நகரில் முன்னெடுக்கப்படவுள்ள புதிய திட்டமும் அடங்கியுள்ளது. மேலும், தென் பிராந்தியத்தில் தனது பிரசன்னத்தை விரிவாக்கம் செய்யும் வகையில், மாத்தறை உதார மாவத்தையில் புதிய திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது. அதிகளவு குடியிருப்புகளை கொண்ட இந்தப் பகுதி காலி மாத்தறை பிரதான வீதியிலிருந்து 350 மீற்றர் தூரத்திலும், மாத்தறை நகரிலிருந்து 3 கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. இந்த காணியை அண்மித்து சகல அரச மற்றும் தனியார் பாடசாலைகளும் அமைந்துள்ளன. அழகிய ஹிக்கடுவ கரையோரத்துக்கு முகப்பாக, Prime Group இனால் மற்றுமொரு திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலும் பின்னதுவ பகுதியிலும் வதிவிடத் திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.

தற்போது, இலங்கையின் நம்பிக்கையை வென்ற ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளர் எனும் நிலையை எய்தியுள்ள Prime Group, வளர்ச்சியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்ப்பதுடன், அதிகளவு சர்வதேச சந்தைகளை சென்றடையவும், புதிய வியாபார வழிமுறைகளை தெரிவு செய்யவும் எதிர்பார்த்துள்ளது.



# அறுவை மருத்துவத்தில் சுட்டிகை

**வைத்திய கலாநிதி**
**செல்வி.சுலோசனா பஞ்சராசா BSMS(Jaf)**
**மருத்துவ அதிகாரி,**
**சிவா சித்த வைத்திய மையம் கைதடி.**

சித்த மருத்துவத்தில் அக்கினிப் பிரயோகங்களில் ஒன்றாகத் தொன்று தொட்டு சித்தர்களால் பின்பற்றி வந்த சித்த முறைகளில் சுட்டிகையும் ஒன்றாகும்.

மருத்துவம் தோன்றிய காலம் முதலே சித்தர்கள் இம்முறையைப் பயன்படுத்தி பற்பல நோய்களைக் குணப்படுத்தி வந்துள்ளார்கள். இச் சுட்டிகையில் சில காலத்தோடு சேர்ந்து அருகிப் போனாலும், இன்னும் சிலவற்றைப் பரம்பரை மருத்துவர்களும், எமது வைத்தியர்களும் பேணிப் பாதுகாத்துப் பல நோய்களைக் குணப்படுத்தி வருகின்றார்கள்.

இச் சுட்டிகையானது மண், காற்று, மரம், உலோகம் எனும் பலவற்றைப் பயன்படுத்தி சித்தர்கள் காலத்தில் சிகிச்சையளிக்கப்பட்டது. தற்காலத்தில் உலோகத்தைப் பயன்படுத்தியே பெரும்பாலும் வைத்தியர்களால் இந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

> **அண்ட வீக்கம், சிறிய அளவுகளில் ஏற்படும் குடலண்டம், கைகளில் ஏற்படும் விறைப்புத்தன்மை [Carpel tunnel Syndrom], சருமத்தில் ஏற்படும் நோய் நிலைகளான [viral wart, skin tags] போன்றவற்றிற்கும் சிறந்த தீர்வை வழங்குகின்றது**

ஆனாலும், மண், மரம் போன்ற முறைகள் பண்டைய காலம் முதல் இன்று வரை பாமர மக்களிடத்திலே அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. உதாரணமாகக் காலில் ஆணி குற்றிய இடத்தில் உப்புக்கல் வைத்துச் சுடுவதைக் குறிப்பிடலாம். விஞ்ஞான ரீதியில் நோக்குமிடத்து இச்செய்கையானது ஏர்ப்பு வலியை (Tetanus) ஏற்படுத்தும் கிருமி வெப்பத்தால் இறக்கச் செய்யப்படுகின்றது.

இவ் சுட்டிகைப் பிரயோகத்திற்குப் பயன்படுத்தப்படும் சுட்டிகைக் கருவியானது 9 வகையாகக் கூறப்பட்டுள்ளது. நோய் நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் சுட்டிகையின் வடிவம் மாற்றமடைகின்றது.

உடுக்கு, முட்சுவர், பிறை, கலப்பை போன்ற வடிவங்கள் பயன்படுகின்றன.

இச்சுட்டிகைப் பிரயோகமானது காலாணிக்கான சிகிச்சையில் பெரும் பங்கு வகிக்கிறது.

நோயாளிக்கு வேதனையைக் குறைத்து காலாணியை முற்றாகக் குணப்படுத்த முடியும். இதற்கு ஐம்பொன்னால் செய்யப்பட்ட சுட்டிகைக் கருவியே சிறந்தது ஆனாலும் இரும்பு, செப்பால் செய்யப்பட்ட சுட்டிகை கருவியும் பயன்பாட்டில் காணப்படுகிறது. முதலில் ஆணிக் கூட்டினை ஓரளவு

சீவி இந்தக் கருவியை நன்றாகச் சிவக்கக் காய்ச்சி கற்றாளைச் சோற்றை அவ்விடத்தில் பூசி வட்டமாகச் சுடுதல் வேண்டும். நோயாளியிற்கு வலி ஏற்படும் போது சுடுதலை நிறுத்தி மருந்தினை வைத்துக் கட்டல் வேண்டும். இவ்வாறு 3 - 4 கிழமைகள் செய்து வரப் பூரண குணமுண்டாகும்.

தற்காலத்தில் குதிவாதம் என்னும் பாரிய பிரச்சினை வயது வேறுபாடின்றிக் காணப்படுகின்றது.

அதாவது பிரதானமாகக் காலையில் கால் வைத்து நடக்க ஆரம்பிக்கும் போது குதிக்காலில் அதிகளவு நோ காணப்படும். இந்நோய் நிலைமைக்கும் சுட்டிகைப் பிரயோகமானது மிகச்சிறந்த தீர்வை வழங்குகின்றது.

இவை தவிர அண்ட வீக்கம், சிறிய அளவுகளில் ஏற்படும் குடலண்டம், கைகளில் ஏற்படும் விறைப்புத்தன்மை (Carpel tunnel Syndrom), சருமத்தில் ஏற்படும் நோய் நிலைகளான (viral wart, skin tags) போன்றவற்றிற்கும் சிறந்த தீர்வை வழங்குகின்றது.

சித்தர்கள் கூறிய இந்தச் சுட்டிகைப் பிரயோகமானது காலத்திற்கேற்ப வளர்ச்சியடைந்து ஆங்கிலேய மருத்துவத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆகவே, சித்தர்கள் கூறிச் சென்ற இவ்வரப்பிரசாதங்களை அழிய விடாது பாதுகாத்து அதன் பயன்களை அறிந்து பிரயோகித்து நோய்களில் இருந்து பாதுகாப்பு பெறுவோம்.

## மஸ்கெலியா சென் ஜோசப்ஸ் கல்லூரியின்

# 84ஆவது கல்லூரி தினம்



பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி



இன்று எமது கல்லூரியான மஸ்கெலியா சென் ஜோசப்ஸ் கல்லூரியின் (தேசிய பாடசாலை) 84ஆவது கல்லூரி தினமாகும்.

இந்தப் பாடசாலையின் பழைய மாணவன் என்ற வகையில், எனது அனுபவப் பகிர்வை, இன்றைய தலைமுறைக்குப் பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

நீர்த் தேக்கத்தினுள் மூழ்கியுள்ள, நான் கல்வி கற்ற பழைய அர்ச் சூசையப்பர் பாடசாலையின் நினைவுகளை, அதன் அமைவிடத்தை ஒரு கணம் மீட்டுப் பார்க்கின்றேன்.

பாடசாலைக்கு செல்வதற்கென ஒரு சிறு பாதை. பாதையின் ஒரு பக்கம் சுடுகாடு. சுடுகாட்டை அண்டியதாக ஒரு மூங்கில் தோப்பு. தோப்பை அண்மித்து எனது பாடசாலை. அதற்கு அண்மையில் ஒரு சிற்றாறு. சிற்றாற்றில் இருக்கும் ஏராளமான சிறு மீனினங்கள். அவைகளில் 'கொறட்டை' எனப்படும் சிறு மீன் கூட்டம். தலை கருப்பாகவும், வால் சிறியதாகவுமுள்ள சிறு உயிரினமது.

நானும், எனது பால்ய நண்பர்களும் சேர்ந்து, அந்த மீன்களைப் பிடித்து விளையாடுவது வழமை.

அக்காலத்தில் பாடசாலையில் ஒரு சிறிய பனிஸூம், பால் ஒரு கோப்பையும் தருவார்கள். ஒவ்வொரு நாளும் பால் வாங்கும் கோப்பையை வீட்டிலிருந்து எடுத்துச் செல்வது வழமை. சாப்பிடும் பொழுது, தவறுதலாக சுடுகாட்டை நோக்கி கையை நீட்டி விட்டால் போதும்.

பேய் பிடித்து விடுமென பயத்தை ஊட்டும் சக மாணவச் சிறுவர்கள்.

அதற்குப் பிராயச்சித்தமாகக் கைவிரல்களை வாயினுள் கடிக்க வேண்டும். மீதமுள்ள பனிசையும் இடுகாட்டில் வீசி விடுவோம். இப்போது நினைத்தாலும் வேடிக்கையாக இருக்கும்.

பாதையிலிருந்து நிமிர்ந்து பார்த்தால் தெரிவது மிக உயரமான கத்தோலிக்கத் தேவாலயம். சுமார் ஐம்பதுக்கும் மேலதிகமான படிகளிலேறி, அத்தேவாலயத்தை அடைய முடியும்.

மாதத்தில் ஓரிரு நாட்கள் அருகிலுள்ள ஸ்ரீ சண்முக நாதர் ஆலயத்திற்கு இந்து மத மாணவர்களை அழைத்துச் செல்வார்கள் அக்கால ஆசிரியர்கள்.

பழைய பாடசாலை வரலாறு வியக்கத்தக்கது.

எட்டாம் திகதி ஜூலை மாதம் 1940இல் சுமார் எண்பது மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது இக்கல்லூரி! அந்த காலத்தில் இப்பாடசாலையின் பெயர் 'அர்ச் சூசையப்பர் ரோமன் கத்தோலிக்கப் பாடசாலை' ஆகும்.

இலங்கையின் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதற்காகத் தென்னிந்தியாவிலிருந்து பிரித்தானியரால் அடிமைகளாகக் கொண்டு வரப்பட்ட தமிழ் மக்கள், மத்திய மலை நாட்டில் குடியமர்த்தப்பட்டனர்.

இந்த மக்களைச் சரியான பாதையில் வழி நடத்துவது அவசியமென உணர்ந்த அன்றைய கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவரினால் இந்த பாடசாலை ஆரம்ப காலகட்டத்தில் தேவாலயத்தினுள் ஆரம்பிக்கப்பட்டது.

வரலாற்று ரீதியிலான வெளிப்பாடுகளுடன் முதன்முதலாக இரண்டு ஆசிரியர்களுடனும், எண்பது மாணவர்களுடனும், இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது .

இப்பாடசாலையின் முதலாவது தலைமை ஆசானாக அமர்ந்து, அதனது வளர்ச்சிக்கு உதவியவர் டி.எம்.எட்வேர்ட்ஸ் என்பவர் ஆவார்.

அன்றைய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவச மதிய உணவுத் திட்டமானது முதன்முதலாக இப்பாடசாலையில் பன்னிரெண்டாம் திகதி ஏப்ரல் மாதம் 1944இல் வழங்கப்பட்டது.

1960இல் அரசினர் வித்தியாசாலையைக் கையேற்கும் வரையும் தொடர்ந்து, பின்னர் முதலாம் திகதி ஆகஸ்ட் மாதம் 1963ஆம் ஆண்டளவில் அரசினர் கலவன் பாடசாலையாக இப்பாடசாலை பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

காலவோட்டத்தில் பல்வேறுபட்ட அதிபர்களையும், ஆசிரியப் பெருமக்களையும் தன்னகத்தேக் கொண்டு வளர்ந்த இந்த பாடசாலை 1968இல் நாட்டின் அபிவிருத்தி, விவசாயம், மின்சார உற்பத்தியை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மௌசாக்கல நீர்த்தேக்கத்தின் காரணமாக புதிய மஸ்கெலிய நகருக்கு மாற்றப்பட்டது.

பழைய பாடசாலையானது நீரில் மூழ்கிய நிகழ்வு இன்றும் எம் மனதினில் மாறா வடுவினை ஏற்படுத்தி விட்ட ஒன்று.

பாடசாலையும், தேவாலயமும் அமைந்து இருந்ததற்கான எந்த தடயங்களும் இன்று இல்லாதது வேதனை மிக்க விடயமாகும்.

சில மதத் தலங்களின் கட்டடங்கள் மட்டும் இன்னும் நீரினுள் காணப்படுவது மட்டும் தான் பழைய நகரம் இருந்ததற்கான சான்றுகள்.

இவைகளையாவது பாதுகாக்க வேண்டியது தொல்பொருள் திணைக்களத்தின் கடமைப்பாடு.

பழைய பாடசாலையை அண்மித்து ஓடிய இயற்கையான சிற்றாறு மட்டும் இன்றும் அதன் போக்கில் ஓடுவதனை வறட்சிக் காலத்தில் காண முடியும். இதுவொன்றே பாடசாலையின் ஞாபகத்தினை எம்மவர்களுக்கு மீளவும் நினைவூட்டுகின்றது.

பழைய பாடசாலை மௌசாக்கல நீர்த்தேக்கத்தினுள் மூழ்கியதனால் எமக்கு புதியதொரு பாடசாலை இல்லாத நிலைமை.

அப்போதைய சமனெலிய சிங்கள மகா வித்தியாலயமானது காலை எட்டு மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை சிங்கள மொழி மூலமான மாணவர்களுக்கு நடைபெறும். அதன் பிறகு தமிழ் மொழி மூல மாணவர்களுக்குப் பாடசாலை நடத்தப்பட்டது.

பிற்பட்ட காலப்பகுதியில் சமனெலிய சிங்கள மகா வித்தியாலயமானது வேறு ஒரு இடத்துக்கு மாற்றப்பட்டதன் காரணமாக தற்போது இருக்கும் சென் ஜோசப்ஸ் கல்லூரிக்கு அப்போதையக் கட்டடங்களும், அதனுடன் இணைந்த நிலப்பரப்பும் உரித்தானது.

மஸ்கெலியா நகரின் நுழைவாயிலுக்கு அருகாமையில் மிகவும் ரம்மியமான சூழலின் மத்தியில் காணப்படுவது தான் சென் ஜோசப்ஸ் கல்லூரி (தேசிய பாடசாலை). இப்பாடசாலை படிப்படியாக வளர்ச்சியடைந்து, ஓங்கி, விருட்சமாக வளர்ந்து, வளர்த்தவர்களுக்கு நன்றி பாராட்டும் நல்லறிவாளர்களது முயற்சியினால் சென் ஜோசப் தமிழ் மகாவித்தியாலயமாக மாற்றமடைந்து, பின்னர் சென் ஜோசப்ஸ் கல்லூரி (தேசிய பாடசாலை) என்ற பெயருடன் மாட்சி மிக்கதாக விளங்குகின்றது.

1971 வரை அதிபர் எம்.நீக்கலாப்பிள்ளை அவர்களது தலைமைத்துவத்தில் இப் பாடசாலை தனக்கென தனியான பாதையைப் பதிவு செய்து கொண்டு வந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சியைக் குறிப்பிடும் வகையில், 1973இல் மாணவர்களது கல்வி வளர்ச்சியில், பாடசாலை அத்தியாயத்தில், ஒரு திருப்புமுனையாக அமைந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தலைசிறந்த பாடசாலை ஒன்றிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த சி.கணபதிப்பிள்ளை என்ற அதிபரின் வருகையானது இப்பாடசாலை வரலாற்றில் ஒரு பொற்காலம் எனக் கூட வர்ணிக்கலாம்.

இன்று இப்பாடசாலையைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் உருவாக்கத்திற்கு வித்திட்டவரே இவர் தான் என்றால் அதில் தப்பில்லை. தாய் கட்டிடத்தைச் சுற்றி இருந்த காடுகளை, பற்றைகளை , பாரிய புல்டோசர் இயந்திரங்களைக் கொண்டும், சிரமதான அடிப்படையிலும், அழித்து தளம் வெட்ட உறுதுணையாக இருந்த கல்விப் பெருந்தகை இவராவார்.

லக்சபானை நீர் மின் திட்டம், கென்யன் திட்டம் போன்ற திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட கால கட்டமது. அத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட, பாரிய இயந்திரங்களை இலவசமாகப் பெற்று, தற்போது அமைந்துள்ள பாடசாலைக் கட்டடங்களுக்கான தளத்தை வெட்ட ஒழுங்கு செய்தமை இவரது தனித்துவமான முயற்சிகளுக்கான எடுத்துக் காட்டு!

எம்மவர்களுக்கு வாசிகசாலை மணம் கூடத் தெரியாத காலகட்டமது. முதன்முதலாக வாசிகசாலை அமைத்து , அதற்குரிய புத்தகங்களையும் பெற்று, சிறு அறையொன்றினுள் வாசிப்புப் பகுதி, இரவல் பகுதி ஆகிய இரண்டையும், கட்டடப் பற்றாக்குறை காலகட்டத்தின் போதும் திறம்பட நடத்த வழி சமைத்தவர.

வாசிகசாலையின் மகத்துவம் தெரிந்த அதிபர் என்ற காரணத்தினால் எங்கெல்லாம் நூல்களைத் திரட்ட முடியுமோ அங்கெல்லாம் தேடித் திரட்டி வாசிக சாலையை ஒரு கலைக்கூடமாக மாற்றியவர். அன்றைய வாசிப்புப் பயிற்சி தான் பிற்காலங்களில் எங்களைப் போன்றவர்களது வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

முதன்முதலாகப் பாடசாலைக்கு மின் இணைப்பு, தண்ணீர் குழாய் போன்றவற்றை அமைத்ததோடு, விளையாட்டையே கண்டிராத எம்மவருக்கு விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதோடு, பெருமளவு உபகரணங்களையும் தனக்குத் தெரிந்தவர்கள் மூலம் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்தவர்.

உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கிரிக்கெட், கெரம், தாம், செஸ் போன்ற பல்வேறு பட்ட உபகரணங்களைப் பெற்று, மாணவர்கள் அனைவரும் கட்டாயமாக இத்துறைகளில் பங்குபற்ற வேண்டும் எனவும் ஊக்குவித்தவர்.

விளையாட்டுப் போட்டிக்கென முதன்முறையாக இல்லங்கள் உருவாக்கப்பட்டு, மாணவர்களது திறன்கள் வெளிப்படுத்தப்பட்டன.

ஆங்கில வாசனையே கண்டிராத எம்மவருக்கு English Club என்ற அமைப்பொன்றை அமைத்தவர். கடுங் குளிராக இருந்தாலும். அந்த குளிரையும் பொருட்படுத்தாது அதிகாலை நான்கு மணிக்கு நகரிலும், அதனை அண்டிய பிரதேசங்களிலுமுள்ள, பின் தங்கிய மாணவர்கள் அவரிடம் இலவச ஆங்கிலக் கல்வி கற்கச் சென்றதனை எண்ணிப் பார்க்கின்றேன்.

ஒவ்வொரு மாதமும் கல்வி ரீதியாக, பேச்சு, நாடகம், பொது அறிவு, மனனப் போட்டிகள், திருக்குறள் போட்டிகள், கவிதை, கட்டுரைப் போட்டிகள், முத்தமிழ் மன்றங்கள், நடத்தப்பட்டன.

வருடாந்தப் பரீட்சைகளில் ஒவ்வொரு பாடங்களிலும் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களும், வகுப்பு பரீட்சைகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தினைப் பெற்றவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்வாறானவர்களுக்கும், போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் கல்லூரித் தினத்தன்று சான்றிதழ்களும், பரிசுகளாக நல்லறிஞர்களது புத்தகங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது இன்றும் எம் மனக்கண் முன் அசை போடுகின்றது.

தற்போதைய கால கட்டத்தில் அணிவிக்கப்படும் பதக்கங்கள் அக்காலத்தில் வழங்கப்படவில்லை. மாறாக, தரம் வாய்ந்த எழுத்தாளர்களது புத்தகங்கள், நன்னெறி நூல்கள், திருக்குறள், அகராதிகள் போன்றவைகள் வழங்கப்பட்டு மாணவர்களது வாசிப்பு, அறிவு, சிந்திக்கும் திறன் போன்றன மேம்படுத்தப்பட்டதானது சிறப்பு மிக்க ஒன்றாகும்.

மனையியல் கூடம், தையற் பயிற்சி, மாணவர் மன்றங்கள், இந்து சமய மன்றங்கள், கிறிஸ்தவ மன்றங்கள், இஸ்லாமிய மன்றங்கள், மாணவர் தலைவர் முறைமை, சாரணிய அமைப்பு, சங்கீதம், நாடகங்கள் ஆகியவை இப்பாடசாலையில் உருவாக முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

பாடசாலைக்கென ஒரு சின்னம் தேவையென உணர்ந்து அதனை அறிமுகப்படுத்தியவர்.

*'Tedice vincimus'* என்ற லத்தீன் மொழி வாசகமே இச்சின்னத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

"தைரியத்துடன் வெற்றி பெறுவோம்" என்பது இதனது அர்த்தம்.

நாடெங்கும் பஞ்சம் தலைவிரித்தாடிய கால கட்டம்.

விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாடசாலை வளவெங்கும் கரும்பு, மரவள்ளிக் கிழங்கு, வற்றாளைக் கிழங்கு, கோவா, போன்ற பல்வேறுபட்ட பயிர்களை நாட்டி, இத்துறையை ஊக்குவித்தவர்.

பின்னேரம் நான்கு மணி வரை இலவச வகுப்புகள் நடத்தப்பட்டு, அதன் பின்னர் கட்டாயம் விளையாட்டு பயிற்சியினையும் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

இலங்கையிலுள்ள ஓரிரு வெளிநாட்டுத் தூதுவர்களையும், அன்றைய கல்வி அமைச்சின் செயலாளரான கலாநிதி பிரேமதாச உடகம போன்றவர்களைப் பரிசளிப்பு விழாக்களுக்கும், பாடசாலை வைபவங்களுக்கும் பிரதம விருந்தினர்களாக இவரால் அழைக்கப்பட்டிருந்தமையானது எம் மத்தியில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தி இருந்ததெனக் கூறினால் அது மிகையாகாது



ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்ட தினமான இருபத்தெட்டாவது வருடாந்த நினைவு விழாவும், மனித உரிமை தினத்தின் இருபத்தைந்தாவது நிறைவு விழாவும் எம் பாடசாலையில் கொண்டாடப்பட்டது மாத்திரமல்லாது, அந்நிறுவனங்களின் உயர் அதிகாரிகளையும் பாடசாலைக்கு வரவழைத்தவர். அக்காலத்தில் எமது நாட்டிலுள்ள அனைத்து தூதரகங்களுக்கும் கடிதம் எழுதி, அந்நாடுகள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ள இவ்வாறானவர்களின் வருகைகள் எம்மை ஊக்குவித்தன.

ஒவ்வொரு வகுப்பறைகளிலும் சர்வதேச நாடுகளின் முக்கியத்துவத்தை உணர்த்தும் படங்கள் மாட்டப்பட்டிருக்கும். அந்தந்த நாடுகளின் கலை, கலாசார, பண்பாடுகளைப் பிரதிபலிப்பதாக அவைகள் இருந்ததனால் அந்தந்த நாடுகளைப் பற்றி அறிய வாய்ப்பு கிடைத்தது.

இப்பாடசாலையோடு இரண்டறக் கலந்து நிற்கும் மஸ்கெலியா கதிரேசன் கோவிலில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் ஆசிரியர்களையும், மாணவர்களையும் பெருமளவில் பங்கேற்கச் செய்து சைவத்திற்கும் தொண்டாற்றியவர்.

ஒரு உண்மைச் சேவகனின் மனம் தளராத சேவையைப் பாராட்டுவது மனித நேயமுள்ள எந்தக் குடிமகனும் செய்ய வேண்டிய கடமை.

அதனை இன்றைய இளம் பராயத்தினரிடம் சரியான தகவல்களைக் கொண்டு சென்று எம் முன்னோடிகளை அடையாளப்படுத்துவதும் நம் கடமையாகும்.

"என்றாவது ஒரு நாள் கொழும்பு சென். ஜோசப்ஸ் கல்லூரிக்கு இணையான கல்லூரியாக இந்த கல்லூரியைக் கொண்டு வருவதே என் கனவாகும்" என அவர் அடிக்கடி மாணவர்களிடம் கூறுவதுண்டு.

இவ்வாறான மகானுக்கு நம் சமூகம் இதனை விட எதனைத் தந்து விடமுடியும்?

இவரைக் கண்டாலே நடுநடுங்கிய காலம்.

கண்டிப்பும், கட்டுப்பாடும் மிக்க அதிபர். அவர் பெருமளவு ஆங்கிலத்திலேயே கதைப்பார். எங்களுக்கு ஆங்கிலம் தெரியாத காலம். அதனால் அலுவலகப் பக்கம் செல்வதென்றாலே ஒரு தயக்கம் தான்.

பாடசாலைக்குத் தேவையான வளங்களுக்கு அரசை மாத்திரம் நம்பியிராமல், பெருமளவு வளங்களை தனக்குத் தெரிந்தவர்கள் மூலம், நண்பர்கள் மூலம் பெற்றுக் கொண்டது இவரது ஆளுமைக்கான உதாரணங்கள்.

மாணவர்கள் வருவதற்கு முன்பதாகவே, அக்காலத்திலிருந்த பெருமளவான ஆசிரியர்கள் பாடசாலைக்கு வந்து விடுவர். இத்தகைய செயற்பாடுகள் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு முன்னுதாரணமாக இருந்தது மட்டுமல்லாது, தலைமைத்துவ பண்பு, நேர முகாமைத்துவம் ஆகியவற்றை மறைமுகமாக வளர்த்தனர் என்பதுவும் புலனாகும்.

மிகக் குறுகிய காலம் ( சுமார் ஒன்றரை வருடங்கள்), மாத்திரம் எமது பாடசாலையின் அதிபராக 1973- 1974ஆம் ஆண்டுகளில் கடமையாற்றிய இவர் மீண்டும் வட மாகாணத்திலுள்ள வேறொரு பாடசாலைக்கு சடுதியாக இடமாற்றம் செய்யப்பட்டார்.

அவர் பதவி வகித்த அந்த குறுகிய காலத்தில் எண்ணிப் பார்க்க முடியாத பாரிய வளர்ச்சியினைக் கண்டிருந்தது எம் பாடசாலை!

எவ்வித இன, மத, பாகுபாடு இல்லாமல் சகோதரத்துவத்துடன் நம் தமிழினம் தலை நிமிர வழிவகை செய்தவராக இருந்த இவரை இன்றும் இப் பகுதி வாழ் மூத்தக் குடியினர் நினைவில் வைத்திருப்பது பதிவிற்குரிய ஓர் அம்சமாகும்.

இதுபோல, இவரைத் தொடர்ந்து வந்த அனைத்து அதிபர்களும் தங்களது பணிகளை மிகச் சிறப்புடனும், முழு முயற்சியுடனும் பாடசாலை வளர்ச்சிக்காக தங்களை அர்ப்பணித்துச் சேவையாற்றினர்.

அக்காலத்தில் எமக்குக் கற்பித்த ஆசிரியர்களுள் பெருமளவானோர் எம்மைக் கண்டிக்கும் போது கூட நாகரிகமான சொற்பிரயோகங்களையே பயன்படுத்தினர். அந்த வகையில் நாம் சிறந்த சொல்லாட்சியைக் கற்கக் கூடியதாக இருந்தது

இவ்வாறான பல்வேறுபட்ட பரிணாம வளர்ச்சிக் கூடாக வளர்த்தெடுக்கப்பட்ட எமது கல்லூரியானது இன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களையும் , அது போல ஆரம்பப் பிரிவுக்கெனவொரு தனிப் பாடசாலையும் அமைக்கப்பட்டு இருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

இப்பாடசாலை இன்று பல்வேறு மட்டங்களிலும், பல்வேறு துறைகளிலும், மாவட்ட, மாகாண, நாடளாவிய ரீதியில் முன்னேறி வருவது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப்பாடசாலையின் வளர்ச்சிப் போக்கில் இன்று கலை, வர்த்தக, விஞ்ஞானம் ஆகிய உயர்தரப் பிரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுவதானது இந்த பாடசாலையின் முன்னேற்றப் பாதையில் ஒரு மைல் கல்லாகும்.

கல்வித் துறையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று , முன்னோக்கிச் செல்வதுவும் பாராட்டப்படக்கூடிய ஓர் அம்சமாகும்.

ஆடம்பரமற்ற, எளிமையான, இலட்சிய நோக்கிலிருந்து சிறிதும் பிறழாமல், உறுதி கொண்டு மக்களின் நல்வாழ்வுக்கு நிலைக்கலனாயுள்ள தெய்வ பக்தி, அன்பு ,அறிவு, பண்பு, ஒழுக்கம், முதலிய நற்சீலங்களைப் பரப்ப இக்கல்லூரி ஆற்றிய பணிகள் மகத்தானது என்பதில் சந்தேகம் இல்லை.

இப்பாடசாலையில் கல்வி கற்றவர்கள் இன்று வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, கணக்காய்வாளர்களாக, அதிபர்களாக, ஆசிரியர்களாக, சமூக சேவையாளர்களாக, பேராசிரியர்களாக, சட்டத்தரணிகளாக, பட்டதாரிகளாக, பேச்சாளர்களாக, தொழிலதிபர்களாக, உருவெடுத்ததற்கு இப்பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பே காரணமாகும்.

இந்த வகையில், இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவன் என்ற வகையில், பின்னாளில் இப்பாடசாலையிலேயே ஆசிரியராகவும், பின்னர் மாவட்ட, மாகாண ரீதியிலான ஆசிரிய ஆலோசகராகவும், பத்திரிகை நிருபராகவும், விரிவுரையாளராகவும், இராஜத் தந்திரியாகவும் கடமையாற்றுவதற்கு வழி சமைத்த, அதற்காக ஊக்குவித்த சகல ஆசிரியர்களையும், அதிபர்களையும், நண்பர்களையும் இத்தருணத்தில் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். இவை எல்லாவற்றிற்கும் எனக்கு அடித்தளமிட்டது எமது பாடசாலை தான் என்பதனை எண்ணிப் பார்க்கின்ற பொழுது இன்றும் அது எனக்குப் பெருமை தரக் கூடியதொன்றாகவே காணப்படுகின்றது. இவ்வாறு என்னையும், என்னைப் போன்ற பலரையும் வளர்த்தெடுத்த இந்தப் பாடசாலையின் எண்பத்து நாலாவது கல்லூரி தினம் இன்றாகும்.

இத்தினத்தில் எமது தாய் பாடசாலைக்கு எம்முடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்வேறு நன்மதிப்புகளைப் பெற்று, பல்வேறு உயர் பதவிகளை ஆற்றிக் கொண்டிருக்கும் அனைவருக்கும், இனி வரப் போகும் சமூகத்திற்கும், இந்த ஸ்தாபனம் தொடர்ந்தும் தன் நேசக்கரத்தினை நீட்டி தனது சேவையை விஸ்தரிக்க வேண்டும் என்பதே எனதும், மலையக மைந்தர்களின் நம்பிக்கையும், அபிலாசைகளும் ஆகும்.

தற்போதைய அதிபர் நல்லையா பரமேஸ்வரன் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், சமூகம், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரது பங்களிப்புக்களுடன் இப்பாடசாலை மென்மேலும் முன்னேறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பாடசாலை என்பது வெறும் கட்டடங்கள் அல்ல. அதுவொரு உணர்வு மிக்க, உயிரோட்டமுள்ள நிறுவனமாகும். நாட்டிற்குத் தேவையான நல்ல பிரஜைகளை உருவாக்கும் இடமும் இதுவேயாகும்.

"இந்த உலகை மாற்றுவதற்கு உங்களால் பயன்படுத்தக் கூடிய மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வி" என்றார் நெல்சன் மண்டேலா. அத்தகைய கல்வியுடன் இணைந்த கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களை, இணைப்பாட விதானங்களை எமது பாடசாலை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் பொழுது அதுவே சமூகத்தின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் எனலாம்.

தகுதி வாய்ந்த நல் ஆசான்களின் சேவையைப் பெற்று நாட்டிற்கு உகந்த உத்தம சீலர்களை, பண்பாளர்களை, கல்விமான்களை இப்பாடசாலை உருவாக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"வாழ்க வாழ்கவென வாழ்த்துவோம் நாமே
வளம் தரும் கலைகளை நாமே
மஸ்கெலியா நகர் ஜோசப் கல்லூரி
என்றென்றும் புகழுடன் வாழ்க"



# மனோவுக்கு எதிராக மலையகத்தில் ஆர்ப்பாட்டம்



ஆ.ரமேஸ், மஹிந்த குமார்

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மலையகத்தில் பல இடங்களில் ஞாயிற்றுக்கிழமை(08) போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்த போராட்டங்கள், கொட்டக்கலை, பொகவந்தலாவை, காவத்தை, தெஹியோவிட்ட மற்றும் பதுளை ஆகிய நகரங்களிலேயே முன்னெடுக்கப்பட்டன.

















# ஐயாவுக்கு இறுதி அஞ்சலி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மறைந்த பெருந்தலைவர் இரா.சம்பந்தனின் இறுதிக் கிரியை அன்னாரின் சொந்த ஊரான திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெற்றது. அங்குச் சென்றிருந்தவர்கள் ஐயாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

















பிரித்தானியா

பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு

# இந்திய வம்சாவழியினர் 26 பேர் தெரிவு



பிரித்தானிய பாராளுமன்றத் தேர்தல் பெரிய எதிர்பார்ப்புகளுக்கு பின்பு கடந்த 04ஆம் திகதி நடைபெற்றது. மொத்தம் 650 மக்களவை இடங்கள் இருக்கும் நிலையில் பெரும்பான்மை வெற்றி பெற 326 தொகுதிகள் வேண்டும் என்ற நிலையில், கடந்த 05ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

இதில் தொழிலாளர் கட்சி 411க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்ற அதேநேரம், ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி வெறும் 121 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்று தோல்வியடைந்தது.

இதனால் ரிஷி சுனக்கின் ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சிக்கு பெருத்த பின்னடைவு ஏற்பட்டுள்ள நிலையில், 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அக்கட்சிக்கு இது பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

இதற்கிடையே பிரதமராக புதிதாக பதவியேற்கவுள்ள கியர் ஸ்டார்மருக்கு ரிஷி சுனக் தனது வாழ்த்துகளை தெரிவித்த அதேநேரம், தனது கட்சித் தலைவர் பதவியையும் இராஜினாமா செய்தார்.

மேலும் தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று வாக்காளர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

இருப்பினும், பிரதமராக பதவி விலகும் ரிஷி சுனக், தான் போட்டியிட்ட Richmond and Northallerton தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார்.

இந்நிலையில், தமிழ் பேசும் தொழிலாளர் கட்சி வேட்பாளரான உமா குமரன் அபார வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராகியுள்ள அதேசமயம், இந்திய வம்சாவழியினர் 26 பேர் இதில் வெற்றி பெற்றுள்ளனர்.


குறிப்பாக பிரிட்டன் பாராளுமன்ற தேர்தலில், 8 தமிழர்கள் போட்டியிட்ட நிலையில், தொழிலாளர் கட்சி சார்பில் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த உமா குமரன், அமோக வெற்றி பெற்று முதல் பெண் தமிழ் எம்.பி. என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இவர் ஒரு ஈழத்து தமிழ்பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

தான் போட்டியிட்ட தொகுதியில் 19,145 வாக்குகள் பெற்று உமா வெற்றி பெற்றுள்ளார். அதேநேரம், இவரை எதிர்த்த கன்சவேட்டிவ் கட்சியின் வேட்பாளரான கேன் பிளாக்வெல் 3,144 வாக்குகள் மட்டும் பெற்று 4ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

அட்லாண்டிக்

படகு கவிழ்ந்ததில்

# 89 பேர் பலி



அட்லாண்டிக் கடற்பகுதியில் அகதிகள் பயணம் செய்த மீன்பிடிப் படகு கவிழ்ந்ததில் 89 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை (01) குறித்த படகு கவிழ்ந்ததில் நடுக்கடலில் மிதந்துக் கொண்டிருந்த 89 உடல்களை வடமேற்கு ஆபிரிக்க நாடான மாரிடேனியாவின் கடலோரக் காவல் படையினர் மீட்டுள்ளனர்.

170 பேரை ஏற்றிக்கொண்டு செனகல் மற்றும் காம்பியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதே இந்தப் படகு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் 9 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதோடு, 72 பேரைக் காணவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆபத்தான அட்லாண்டிக்கில் பலத்த காற்று மற்றும் அலைகளின் தாக்கத்தினால் குறித்த மீன்பிடி படகு கவிழ்ந்துள்ளது.

2007ஆம் ஆண்டுக்குப் பின்னர் அட்லாண்டிக் கடலில் நடந்த மிகவும் மோசமான அகதிகள் படகு விபத்து இது என்றும் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

டெஹ்ரான்



புதிய ஈரான் ஜனாதிபதியாக

# மசூத் பெசஸ்கியான்

ஈரான் ஜனாதிபதித் தேர்தலில், மருத்துவரும், நீண்டகாலம் மக்கள் பிரதிநிதியாக பணியாற்றியுள்ள, சீர்திருத்தங்களுக்கு ஆதரவாளரான 69 வயதான மசூத் பெசஸ்கியான் வெற்றி பெற்றுள்ளார்.

ஈரானின் ஜனாதிபதியாக இருந்த முகமது ரைசி, கடந்த மே மாதம் நடந்த ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து, புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் நடந்த தேர்தலில், மசூத் பெசஸ்கியான் முன்னிலை பெற்றார். ஆனாலும், அந்த நாட்டின் சட்டத்தின்படி, மொத்தம் பதிவான ஓட்டுகளில், 50 சதவீதம் பெற்றால் மட்டுமே ஜனாதிபதியாக முடியும்.

அதன்படி, அந்தத் தேர்தலில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்த பெசஸ்கியான் மற்றும் தீவிர மதப்பற்றாளரான சயீத் ஜலிலி இடையே, இரண்டாவது சுற்று தேர்தல் கடந்த 5ஆம் திகதி நடந்தது. இந்தத் தேர்தலில் அதிக ஓட்டுகள் பெற்று, பெசஸ்கியான் வெற்றி பெற்றுள்ளார்.

திருவனந்தபுரம்

# பீதியில் கேரளா மக்கள்



கேரளாவில் டெங்கு, பறவை காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் உட்பட பல்வேறு காய்ச்சல்கள் பரவி வருவது, மக்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது.

கேரளாவில் கடந்த சில மாதங்களாகப் பறவை காய்ச்சல் அதிகரித்ததை அடுத்து, மாநில எல்லைகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதேபோல், டெங்குகாய்ச்சலும் பல்வேறு மாவட்டங்களில் கடந்த சில நாட்களாகப் பரவி வருகிறது. இதைக் கட்டுப்படுத்த மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் சூழலில், மேலும் பலவிதமான காய்ச்சல்கள் அங்கு வேகமாகப் பரவி வருகின்றன.

இது தொடர்பாக மாநில சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்படுவதாவது: "மாநிலம் முழுதும் கடந்த ஐந்து நாட்களில் 55,830 பேர் காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் 493 பேருக்கு டெங்கு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆயிரத்துக்கும் அதிகமானோர் டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறிகளுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். பன்றி காய்ச்சலால் 158 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த அறிகுறிகளுடன் கூடிய காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்று வந்த மூன்று பேர் நேற்று முன்தினம் பலியாகினர்.

எலிக் கடி காய்ச்சலால் ஒன்பது பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர். ப்ளூ வகை காய்ச்சலான வெஸ்ட் நைல் காய்ச்சல் ஆறு பேருக்கு இருப்பது கண்டறியப்பட்டது. இதேபோல், 158 பேருக்கு கொரோனா தொற்றும், 64 பேருக்கு மஞ்சள் காமாலை இருப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல், திருச்சூர் பண்ணையில் உள்ள சில பன்றிகளுக்குப் பரவியதை அடுத்து, அங்கிருந்த அனைத்து பன்றிகளையும் கொல்ல உத்தரவிடப்பட்டுள்ளது.

எர்ணாகுளம் மாவட்டத்தில் அதிகளவு டெங்குகாய்ச்சல் பரவி வருகிறது. திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழா, பத்தனம்திட்டா, திருச்சூர் ஆகிய மாவட்டங்களில் காய்ச்சல் பாதிப்பு அதிகமாக உள்ளது" இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



யூரோ: பெனால்டியில்

# சுவிட்ஸர்லாந்தை வென்று அரையிறுதியில் இங்கிலாந்து

## துருக்கியை வென்று அரையிறுதியில் நெதர்லாந்து

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்றது.

சுவிட்ஸர்லாந்துடனான சனிக்கிழமை (06) நடைபெற்ற காலிறுதிப் போட்டியானது வழமையான நேரத்தில் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்த நிலையில், பெனால்டியில் 5-3 என்ற ரீதியில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்றது.

இங்கிலாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை புகாயோ ஸாகா பெற்றதோடு, சுவிட்ஸர்லாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை பிறீல் எம்பொலோ பெற்றிருந்தார்.

பெனால்டியில் சுவிட்ஸர்லாந்தின் மனுவல் அகஞ்சியின் பெனால்டியை இங்கிலாந்தின் கோல் காப்பாளர் ஜோர்தான் பிக்ஃபோர்ட் தடுத்த நிலையில், பேபியன் ஸ்கார், ஸ்கொட்ரான் ஷக்கிரி, ஸெகி அம்டௌனி ஆகியோர் பெனால்டியை உட்செலுத்திய போதும் இங்கிலாந்தின் கோல் பல்மர், ஜூட் பெல்லிங்ஹாம், புகாயோ ஸாகா, இவான் டோனி, ட்ரென்ட் அலெக்ஸான்டர் அர்னோல்ட் பெனால்டிகளை உட்செலுத்திய நிலையில் 5-4 என்ற ரீதியில் வென்ற இங்கிலாந்து அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்ற துருக்கியுடனான காலிறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்ற நெதர்லாந்து அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. நெதர்லாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை ஸ்டெஃபான் டி வேர்ஜி பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. துருக்கி சார்பாகப் பெறப்பட்ட கோலை சமெட் அகய்டின் பெற்றிருந்தார்.

எல்.பி.எல்.

# தம்புள்ள சிக்ஸர்ஸை வீழ்த்திய ஜ.:ப்னா கிங்ஸ்



லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்.), தம்புள்ளயில் சனிக்கிழமை (06) நடைபெற்ற தம்புள்ள சிக்ஸர்ஸுடனான போட்டியில் ஜஃப்னா கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தம்புள்ள சிக்ஸர்ஸ்

ஜஃப்னா கிங்ஸ்: 218/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: பதும் நிஸங்க 88 (53), அவிஷ்க பெர்ணாண்டோ 57 (30), அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் ஆ.இ 19 (06), குசல் மென்டிஸ் 18 (12), சரித் அசலங்க 13 (06) ஓட்டங்கள்)

தம்புள்ள சிக்ஸர்ஸ்: 188/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: றீஸா ஹென்ட்றிக்ஸ் 80 (50), மார்க் சப்மன் 30 (17), சமிந்து விக்ரமசிங்க ஆ.இ 20 (17), குசல் பெரேரா 16 (07), நுவனிடு பெர்ணாண்டோ 16 (08) ஓட்டங்கள். பந்துவீச்சு: அசித பெர்ணாண்டோ 2/25 [4], தப்ரையாஸ் ஷம்சி 2/26 [4])

போட்டியின் நாயகன்: பதும் நிஸங்க

மற்றைய போட்டியில் கண்டி பல்கொன்ஸை கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் வென்றது.



முதலாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில்

# சிம்பாப்வேயிடம் தோற்ற இந்தியா

சிம்பாப்வேயுடனான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஹராரேயில் சனிக்கிழமை (06) நடைபெற்ற முதலாவது போட்டியில் இந்தியா தோற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ஷுப்மன் கில், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே, முகேஷ் குமார், ரவி பிஷ்னோய் (4), ஆவேஷ் கான், வொஷிங்டன் சுந்தரிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், கிளைவ் மடன்டே ஆட்டமிழக்காமல் 29 (25), டியோன் மையர்ஸ் 23 (22), பிரயன் பென்னிட் 22 (15), வெஸ்லி மட்ஹெவெரே 21 (22), அணித்தலைவர் சிகண்டர் ராசா 17 (19) ஓட்டங்களைப் பெற்றனர்.

# கோப்பா அமெரிக்கா: வெளியேற்றப்பட்ட பிரேஸில்



ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்று வரும் தென்னமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளன கோப்பா அமெரிக்கா தொடரிலிருந்து பிரேஸில் வெளியேற்றப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்ற உருகுவேயுடனான காலிறுதிப் போட்டியில், பெனால்டியில் 2-4 என்ற ரீதியில் தோற்றே தொடரிலிருந்து பிரேஸில் வெளியேற்றப்பட்டது.

இப்போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாத நிலையில், பிரேஸிலின் ஈடர் மிலிட்டாவோவின் பெனால்டியை உருகுவேயின் கோல் காப்பாளர் சேர்ஜியோ றொச்ட் தடுத்ததுடன், டக்ளஸ் லூயிஸின் பெனால்டியானது கோல் கம்பத்தில் பட்டு வெளியில் சென்றிருந்தது. உருகுவேயின் ஜொஸே கிமென்ஸின் பெனால்டியை பிரேஸிலின் கோல் காப்பாளர் அலிஸன் பெக்கர் தடுத்தபோதும் மனுவல் உகர்டே தனது பெனால்டியை உட்செலுத்த 4-2 என்ற ரீதியில் வென்று அரையிறுதிப் போட்டிக்கு உருகுவே தகுதி பெற்றது.

உருகுவேயின் பெடெரிக்கோ வல்வர்டே, றொட்றிகோ பென்டாக்கூர், குளோர்ஜியன் டி அர்ரகயெட்டா ஆகியோரும் பிரேஸிலின் அன்ட்ரியாஸ் பெரைரா, கப்ரியல் மார்டினெல்லியும் தமது பெனால்டிகளௌ உட்செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 08 ஜூலை 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.